விறலி விடு தூது

நாகம கூளப்ப நாயகன்

1859

தூது 45

உ

கணபதி துணை.

நாகமகூளப்பநாயகன்

# விறலிவிடுதூது.

இஃது

திருத்தணிகை

சரவணப்பெருமாளையரவர்கள்

முன்பதிப்பித்த

பிரதிக்கிணங்கப்பரிசோதித்து

சிதம்பரம்

கருணாநந்தசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு

சிந்தாத்திரிப்பேட்டை

நெல்லுமண்டி

வெங்கட்டராமமுதலியாரவர்கள்

குமாரராகிய

கேசவமுதலியாரவர்களது

பிரபாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சித்தார்த்தி௵- கார்த்திகை௴.

1859.

மேப்பேர் - சாமிநாயக்கர்வீதியில், நெம்பர்- ௫௫.

உ

கணபதி துணை.

# விறலிவிடு தூது.

காப்பு.

பொங்குபெருஞ்செல்வப்புகழ்ப்பெரியநாகன்பேர்த் *
தூங்கன்விறலிவிடுதூதுக்கு - மங்களஞ்சேர் - *
பஞ்சவருக்கங்களைமுற்றைப்பொன்னெடுங்குன்றிடுகைக்
கஞ்சமலர்க்குஞ்சரமேகாப்பு. - - *

[விறலிபுகழ்ச்சி.]

கார்பூத்தமேனிக்கருணைத்திருநெடுமால் - - *
பார்பூத்தவுந்திபரந்தாமன் - நீர்பூத்த - - (௧)
வேலைகுழூறக்கடைந்தவேலைதருந்தெள்ளமுதம் - *
ஆலைதருவெண்சாறபோகும் - பாலும் - (௨)
கனியுஞ்சருக்கரையுங்கற்கண்டுநாவுக் - - *
கினியபசுந்தேனுமிணக்கித் - தனியாக - - (௩)
மத்தித்தெடுத்தமதுரத்துக்கெண்மடங்கு - - *
தித்திப்புக்கேட்போர்செவிக்கேறத் - தத்தைகள்போய்க் (௪)
குன்றேறத்தோற்றுக்குயின்மாமரந்தோறுஞ் - *
சென்றேறவானிற்சிறுகுரரி - நின்றொதுங்கி - (௫)
விண்ணேறவந்தரத்தில்விஞ்சையரோறக்கனிந்து - *
பண்ணேறப்பாடுமிசைப்பாடினிய - உண்மையருள் (௬)
போதிக்குமெய்த்தவத்தோர்புத்திக்கிடையூறு - *
நாதிக்குமேழிசைக்குநாயகமே - கீதக் - - (௭)
கொழுந்தோடிமன்னவராங்குன்றிற்படரக் - *
கொழுந்தோடிபாடிவருங்கொம்பே - எழுந்தசிமிழ் (௮)
கண்டாரகத்திலொருகாமப்பேயேற்றுவிக்குக் - *
கண்டாரகத்தில்வல்லகாரிகையோ - கெண்டைநெடுங் (௯)
கண்சுருட்டிப்போகர்கருத்தறிவெல்லாஞ்சுருட்டி - *
பண்சுருட்டிபாடுமுயிர்ப்பாவையே - ஒண்கிரணக் - (௰)

காந்தாரக்கொங்கையின்மேற்கைத்தம்புருவணைத்துக் - *
காந்தாரமேற்றுங்கனிமொழியே - சேர்ந்தவரி - (௰௧)
யம்பகாம்போதிலணங்குமணங்குமிசைக் - - *
கும்பகாம்போதிரசகும்பமே - தும்புருதன் - (௰௨)
பாகரஞ்சிதத்தனியாழ்பட்டுறையிலிட்டயர - *
மேகரஞ்சிபாடும்விறலியே - லோகத்திற் - (௰௩)
காகவறிவின்றிக்கலந்தனில்வைத்துண்பாரைத் - *
தேகியென்பார்க்கீயாததியாளா - ராகமெனும் - (௰௪)
கள்ளக்கயிறுகொண்டுகட்டியுருட்டிவிழித் - *
துள்ளுநமனைச்சாட்டுங்கொண்டிசண்டியே - தெள்ளமிர்தத்.
தீங்குதலைச்செல்லாத்தீங்கிலேற்றித்தேட்டையெல்லாம் - *
வாங்கிவிடவல்லமதங்கியே - நீங்கிவெறுப் - (௰௬)
பானமடவார்க்குமாடவர்க்குநல்லசமா - - *
தானநிதானவவதானியே - கானவித்தை - (௰௭)
பாட்டையெல்லாங்கற்றபணிமொழியேநான்பட்ட - *
பாட்டையெல்லாஞ்சற்றேபகரக்கேள் - வேட்டமனை (௰௮)

[அவதானிதன்சம்பவந் தொகுத் துரைத்தல்.]

யாட்டியுடன்போட்டிவிளைத்தாட்டிவிட்டபம்பரம்போல் *
நாட்டையெல்லாஞ்சுற்றியதுநானொருநாள் - தோட்டிதழிப்.
பூவுடைசான்றென்மதுரைப்புக்கதுவுமங்கேயோர் - *
மதவடியாள்கைக்குள்ளாய்ச்சிக்கியதும் - பாவிகிழ - (௨௰)
வோரியென்கைப்பொன்னையுறுஞ்சியதும் போழ்வாய்த்துக்
சாரிசதிசெய்ததுவும்வைத்ததுவும்-போராடி - (௨௰௧)
மேனாகிடவம்பலத்திவ்விட்டதும்வாய்ப்பகட்டால் - *
உளரைவிடப்பற்றியெனையோட்டியதும்-பேராசை (௨௰௨)
அங்கேயிழுக்கமனதாகிவழிகொண்டுபுகல் - *
எங்கேயென்றென்பதூர்க்கேகியதும் - சங்கேந்தும் (௨௰௩)
திம்மராயப்பெருமாள்செஞ்சரணசேகரனே - *
மும்மதமால்யானைமூர்த்தன்னிபனை - நம்ய - (௨௰௪)

கருணாகரனைக்கணயோகயானைப் *
பொருணுவலர்பூஷணனை-இருநிதியைச் (௨௫)
சந்த்ரமுகமந்த்ரதளதந்த்ரகொலுவிந்திரனைச் *
சிந்தமகுமாரசெயதரனை - முந்து (௨௬)
திலைக்கோட்டையானைநெடுங்கலியைத்துரத் *
துலைக்கோட்டுந்த்யாகதுரையை-மலைக்கோட்டில் (௨௭)
ஆளைவைத்துப்பார்க்குமறுபத்துநாலுமன்னரி *
பாளையத்தைவென்றபடையானை-வாளரிசர் (௨௮)
வெஞ்சமருக்கஞ்சாவிருதுவென்றிவாகனைநம் *
பெஞ்சநகர்காக்கும்பெருமானை-வஞ்சகர்க்கோர் (௨௯)
தண்டப்பெரும்புலியைச்சாமித்துரோகரைக்காய் *
வெண்டயத்தாற்சூரியனைவீரியனை-மண்டலிகர் (௩௰)
மாகனகங்கப்பமிடும்வாயிலானைப்பெரிய *
நாகமகுடேந்த்ரநராதிபனை - யோகனையான் (௩௧)
பாடியதுணைமயன்முகம்பார்த்ததுவுமென்கவிவிட் *
டோடியதும்பாக்கியம்வந்துற்றதுவும்-நாடியிங்கே (௩௨)
நான்வந்ததுவுநிமதியிலேயிரண்டு *
மான்வந்தணையவிழிமாதேகேள் - தானபரன் (௩௩)

[பாட்டுத்தலைவன்புகழ்ச்சி]

திக்கெல்லாங்கொண்டாடுஞ்செங்கோல்விசயரங்க *
சொக்கநாகேந்த்ரதுரைராசன்-சக்ரபதி (௩௪)
சேதுபதிபாண்ட்யகுலதெக்ஷிணசிங்காசனந *
ராதிபதிமெச்சுநரபாலன்-கோதில் (௩௫)
உருப்பான்மைவெண்பிறைமேலூர்வதுதன்கோல *
மருப்பாகும்பன்றிமலையான்-திரைக்கரத்தில் (௩௬)
ஆரமணியாரமணியாரமணிவாரிநடு *
வாரியிடுங்குடவமாநதியான்-தார்வேந்தர் (௩௭)
வீதிக்குவீதிவிவாகமணிமுரசம் *
நாதிக்கும்பாண்டிவளநாட்டிறன்-ஆதித்தன் (௩௮)

தேரூரருணைசெயகோபுரநிலைக்குள் - - - *
ஊரூரொனுமுன்மொன்பதூரினான்-சூரியபோர் - (௩௯)
வேலைவைக்குஞ்செங்கருங்கண்பின்னாரிதயவண்டு - *
மாலைவைக்கும்பூந்தளவமாலையான்-கோல - - (௪௰)
முகமிலங்குபணியணிந்துமுதுகணைந்தகலனைகொண்டு *
தகைதவிர்ந்துநடையிறந்துசமரடர்ந்து-பகைவர்தங்கள் (௪௧)
தலையினின்றுதிமிதிதிந்திதகுதிதந்தியெனநடஞ்செய் - *
துலவிவந்துகனகதண்டையொலிமிகுந்து-கலகலென்று (௪௨
கொஞ்சிடச்சதங்கையிட்டகொண்டலொத்திடுந்திறத்த - *
வெஞ்சினப்ரசண்டவுக்ரவெண்பரியான்- வின்சுகரம் (௪௩)
ஒன்றுபடைத்துவருமோங்கலுக்கொப்பாயிரண்டு - *
வென்றிப்புறைசுமந்தமேகமெனத்-துன்று - (௪௪)
மதங்களொனுமூன்றுமாரிசிந்தப்பாகர் - - *
ஒதுங்கநால்வாயாலூதி-அதிர்ந்துபொரும் - (௪௫)
அஞ்சாருதிரத்தையாறாக்கியோரேழு - - - *
மஞ்சார்புனலைமடுத்துநுஞ்சிக்-குஞ்சரங்க - (௪௬)
ளென்பதோரொட்டுமிணையில்லையென்றகற்றி - *
ஒன்பதூர்வீதியுலாவியே-வட்புனைப்போர் - - (௪௭)
பைம்பொன்முடியிடறிப்பத்துநகமுந்தேய்ந்த - - *
கும்பரணகம்பீரகுஞ்சரத்தான்-அம்புவியில் - (௪௮)
காந்துகலியைவெட்டுங்கண்டகோடாரியைப்போல் - - *
ஏந்துவெள்ளைப்பக்கறையிடாலினான்-சாய்ந்தோடிக் - (௪௯)
குன்றிற்கருகாற்குடும்பங்குடியேற - . - *
முன்றிக்குமுறுமணிமும்முரசான்-தின்றவடி - (௫௰)
தூக்கினார்சென்னிதுடிக்கத்துணித்துவிடும் - - *
ஆக்கினைசக்கரப்போலாணையான்-பாக்கியவான் - (௫௧)
கற்பகமாம்பட்டணையுங்கார்கருணையேமணக்கும் - *
பொற்கமலப்போன்றமனப்பூரணவான்-பற்றலார் - (௫௨).
தண்டார்மகுடத்தடவுஞ்சயவீர - - - *
கண்டாமணிமுழங்குங்காலினான்-மண்டுசமர் - (௫௩)

புத்தகளத்தோன்றுருயிர்மேப்ந்தகுற்றுடைவாள் - *
வைத்தணைத்துக்கட்டுமருங்கிணன்-கைத்தலத்தில் (௫௪)
ஐந்தருவுமைந்துவிரலாகித்தருவவெனச் - ஃ
செந்தமிழ்க்குநல்குமலர்ச்செங்கையான்- பைந்தொடியார் *
பொன்முலையாங்கோட்டிற்புதுக்கலவைச்சேறாட்டி - *
மன்மதநூலெழுதுமார்பிணு - நன்மைதரும் (௫௬)
வெற்றிச்சிறுபெண்விளையாடுஞ்சிற்றிலெனச் - *
சுற்றிபகேயூரமணித்தோளிணன்- கற்றவராங் - (௫௭)
கோக்குலத்தைக்காத்தருளுங்கோயாலர்வேயிசைபோல் *
வாக்குமதுரம்பொழியும்வாயிணன்- நாக்குளிரச் - (௫௮)
சொல்லிரசங்கடுவர்ப்பென்றுதள்ளியின்பக் - - *
கல்விரசம்பருகுங்காதிணன்- வல்ல - (௫௯)
மருவலரைவெட்டுகின்றவாள்போன்முகத்திற் - *
கருணையுலவுமலர்க்கண்ணன்- இரவிணுடல் - (௬௰)
சாய்த்தமதிமுகத்துத்தையாலார்முத்தமிட - *
வாய்த்தமுழுமதிபோன்மாமுகத்தான்- காத்தருளும் (௬௧)
எம்பிராணுகோபிலேசரடியெந்நாளும் - - *
செம்பொன்முடிசாங்குமலர்ச்சென்னியான், உம்பர்தொழும்
திண்மலனூர்வெண்ணீற்றுநெற்றிக்கண்காணுத - *
மன்மதன்காணென்னும்வடிவிணன்- தன்னுடைய - (௬௩)
வல்லக்கவார்குலத்தில்வாள்வேந்தர்கண்குளிரப் - *
பல்லக்குமேலுலவும்பாக்கியவான் - வில்லேற்றிக் - (௬௪)
கைகொண்டுபொற்படியின்கால்கொண்டுபஞ்சகதி - *
மெய்கொண்டனையபரிமேற்கொண்டு- செய்யரண (௬௫)
துங்கதளகர்த்தர்துரைமக்கள்வாள்பிடித்துச் - *
சிங்கமெனச்சுற்றித்திரண்டுவர- மங்குலெனக் - (௬௬)
கூனன்முதுகொட்டகமேற்கொட்டுகின்றடம்மாரம் - *
யானையின்மேற்பேரியதிர்ந்துவரச் - சேனையொடு (௬௭)
தாக்குமறுமண்டலிகர்தங்களுக்குச்சென்றுசொல்லுந் - *
கூத்தரல்போல்விரசின்னங்கொம்பூத-நோக்குங் (௬௮)

பரிதிபகைக்குப்பகையெழுந்ததென்ன - *
விருதுகருடாலவட்டம்வீசத்-திரளக்கால் - (௬௯)
வெள்ளைக்கொடியாடைமேகங்கிழித்துவரப் - - *
பிள்ளைப்பிறைபோற்ப்ரகாசிக்க- வெள்ளைவட்டச் (௭௰)
சித்ரக்குடைகள்செயடமாதுகிட்டநிழன் - - *
முத்துமணிப்பந்தரெனமொய்த்துவரக்-கைத்தலத்திற் (௭௧)
கத்திப்பிடித்துவெள்ளிகட்டினதுபாக்கிகொண்டு - *
பத்துலக்ஷங்காலாட்பண்டநடக்கத்-தத்துபரி - (௭௨)
கொக்குநரையான்கைக்குமரியெனராவுத்தர் - *
கைக்குளடங்காதுகான்மீற- நெய்க்கவளம் - (௭௩)
கூட்டியினாபூட்டியிருகொம்புகற்றிபூட்டிமதம் - *
மூட்டிவிட்டமால்யானைமுன்னடக்கக்-கூட்டமிட்டு -(௭௪)
வாரிட்டணிவகுத்துவாதிட்டவேற்றரசர் - *
போரிட்டவெங்களத்திற்போயெதிர்த்து-நேரார்மேற் (௭௫)
கட்டபீரங்கித்தொனியும்புகையுஞ்சூ - - *
விட்டமுகிலுமிடியுமெனப்- பட்டயங்கள் - (௭௬)
வீசுவதும்வெட்டுவதுமின்னலெனவீரர்சிலை - *
பூசலம்புமாரிமழைபோற்பொழியத்-தேசப் - (௭௭)
பரதவங்கள்பட்டுருளப்பாய்ந்தபெருஞ்செந்நீர்ப் - *
பிரளயப்பிரவாகம்பெருகச்-சிரதலத்தில் - (௭௮)
ஆனையிருப்புலக்கையானையடிக்கவிழு - - *
மூளைநுரைத்திரளாய்மொய்த்தோட- வானாற் - (௭௯)
படுந்தீரரேறிவரும்பல்லக்குப்பேய்க்கு - - *
விடுந்தோணிபோலுமிதப்பக்-கிடந்துசிலர் - (௮௰)
வேர்த்துப்பரிசைகொண்டுமேன்மூடிசென்னியொட்டிப் *
பார்த்துக்கமடமெனப்பதுங்கப்-போர்த்தலையில் - (௮௧)
மந்திரவாள்வேந்தர்மகுடத்துதிர்ந்தரத்நம் - *
இந்திரகோபங்களெனச்சிதறச்- செந்தநுகண் - (௮௨).
விந்தையிடிதிரவெற்றிப்பயிரோற்றி - - *
வந்துகொலுவிருக்கும்வாள்வீரன்-முந்துபெரும் (௮௩)

பாதலத்தில்வேரோடிப்பாரிற்படர்ந்துவட ... *
பூரத்திலேறும்புகழிநான் - நீதிபரன் ... (௮௪)
இந்தமகுடேந்த்ரதுரைசிங்காசனாதிபதி ... *
தந்தசௌபாக்கியசம்பன்னன் - செந்துவர்வாய்க் (௮௫)

காமவடிவேல்விழியார்கைவழிவெல்லாமொழுதும் *
நாமவடிவேற்பெரியநாகேந்த்ரன் - சேமநிதி (௮௬)

பூராதிபன்வாழ்வையொக்குநவகோடி ... *
நாராயணன்பெரியநாகேந்த்ரன் - சேரலராம் (௮௭)

ஆட்டுக்கூட்டங்களிலோராண்புலிபோற்பாய்ந்து ... *
நாட்டுக்கூழிற்பெரியநாகேந்த்ரன் - பூட்டுகிலை (௮௮)

அம்பொன்றுவீசவெனரகுநந்குவீடணு ... *
நம்பொன்றமால்பெரியநாகேந்த்ரன் - ஸ்தம்பமென (௮௯)

லோகஞ்சுமப்பதிலோராயிரமௌலி ... *
நாகம்பொரும்பெரியநாகேந்த்ரன்-பாகெனுஞ்சொற் (௯௰)

பாவுக்கேறிக்கனகப்பல்லக்கேறிப்புலவோர் ... *
நாவுக்கேறும்பெரியநாகேந்த்ரன் - வாவிதிகழ் (௯௧)

பெஞ்சநகர்வாழப்பெருஞ்சீர்வளர்ந்தோங்கக் *
கஞ்சமலர்மாதுகலிகூற - வஞ்சகரும் ... (௯௨)

பொய்யும்பரந்தோடப்புண்ணியமுந்தண்ணளியும் *
மெய்யுங்கலந்துவிளையாடப் - பெய்யுமழை (௯௩)

வானம்வழங்கமனைவாழ்க்கையோங்கவன்ன ... *
தானம்வழங்கத்தவமோங்க - நான்மறைக்கும் (௯௪)

நன்னிதியாமேகவண்ணநாதர்திம்மராயர்திருச் *
சந்நிதியிற்பூசைதழைத்தோங்க - இந்நிலத்தில் (௯௫)

எங்கோனபிஷேக[illegible]ந்துமனுவிக்கியானச் ... *
செங்கோலரசுசெலுத்துநாள் - சங்கேந்தும் (௯௬)

[அவதானிதன்பிறப்பாதிசொல்லல்.]

சாரங்கமேனிக்கடவுளிருக்குமந்தச் ... ...*
சீரங்கத்தேபிறந்தேன்செல்வத்தில் - ஈரார்ந்தோ (௯௭)

டாருவபதினுக்குளாரியருமம்வேதமுநா ... *
வேறித்தமிழ் நூலிலக்கணத்தின் - மீறினேன் (௰௮)
வாலசரஸ்பதியென்வாக்கிற்ப்ரசன்னமதா ... *
நாலுகவித்திறமுநானறிந்து - வேலும் ... (௰௯)
மயிலுமெனசொன்னவுணாமாறுமற்சொல்லக் ... *
கயிலாடசிங்கிகழற்ற - அயலொருவன் ... (௨௰)
சொன்னவிருச்சொல்லவெதிர்சூதாடப்பின்முறுகு *
தன்னிலெலறிந்தகல்லுத்தாளென்ணைப் - பன்னுசது (௨௰௧)
ரங்கவிளையாட்டுக்கடிபார்க்கச்சொற்புலவோர் ...*
தங்கள்கவிஸ்யயவதானிக்கச் - சங்கத்தில் ... (௨௰௨)
எட்டெட்டெழுத்தாணிக்கேற்றகவிசொல்லவும்யான் *
அஷ்டாவதானியென்பதாயினேன் - மட்டார் (௨௰௩)
திருப்பதியிலேவாசுதேவன்மகளைக் ... *
கருப்புருவவின்பக்கனியை - விருப்பமுள்ள (௨௰௪)
பூங்காவனத்தைப்பொருத்தமுடன்வேட்டுப் ... *
பாங்கானவாழ்விற்பயிலுநாள் - ஆங்குசெவ்வந் (௨௰௫)
தீசர்திருச்சன்னிதியிலேந்திழையார்சம்பிலொரு *
தாசிமேல்வைத்தேன்றயவுநான் -நேசமாய் (௨௰௬)
இந்தரங்கத்தேதிரிந்தேனின்பரசவல்லியிடத் ... *
தந்தரங்கத்தேதிரிந்தேனாசையால்-அந்தத் .. (௨௰௭)
திரிச்சிராப்பள்ளிக்குச்செல்லாதிருக்கத் ... *
திரிச்சிராதென்மனதுதானும் - ஒருத்தன் ... (௨௰௮)
அறியாச்சிறுவனுடன்யாரொருநாளந்த ... *
வெறியாற்குழற்பரத்தைவீட்டிற் - பிரியமுடன் (௨௰௯)
சென்றிருந்துவந்தேன்றிடுதிடெனவோடிப்போய்க் *
குன்றிருந்தகொங்கைக்குலமனையாட் - குன்கணவர் .. (௩௰)
ஓடத்திலேறிருத்தரியம்போக்கடித்தார் ... *
நாடிச்சிரகிரியைநண்ணினூர் - கூடவந்த ... (௩௰௧).
என்னைச்சவுக்கையில்வைத்தின்பரசவல்லியெனும் - *
பொன்னனையாள்வீட்டுக்குட்போய்ப்புகுந்தார்-அந்நேரம்

மிஞ்சிமிஞ்சிப்பேசினாள்வேசிமகளதற்குள் - *
அஞ்சியஞ்சிப்பேசினானையங்கார்- வஞ்சியந்த - (௱௰௩)
வீட்டுக்கதவடைத்தான் மெள்ளமெள்ளக்கொஞ்சினாள் - *
காட்டிப்புருவோசைக்காட்டினாள்-வீட்டைவிட்டு (௱௰௪)
வந்தார்தம்மையென்னைவாவென்றாற்காவிரியிற் - *
சந்திபண்ணியிக்கரையிற்றாண்டினார்- இந்தவூர்க் - (௱௰௫)
கென்மார்க்கஞ்சொல்லாதேயென்றுசொன்னாரொன்றறந்தத் *
துன்மார்க்கப்பையயெல்லாஞ்சொல்லிவிட்டான் - மன்மதம்.
தொடுத்தாள்கடிகடுத்தாள்தூங்குமஞ்சம்விட்டுப் - *
படுத்தாள்பகைஞரைப்போற்பார்த்தாள்-அடித்தடித்து (௱௰௭)
வேண்டினேன்குட்டுவெளியாக்குவேனென்னைத் - *
தீண்டாதேயென்றாள்சிராப்பளியில்- ஆண்டவள்பாற்.௱௰௮
செல்லாயென்றாள்பரத்தைதேடுவாளேயென்றாள் - *
சொல்லாதவார்த்தைசிலசொல்லினாள்-இல்லாள் - (௱௰௯)
வலிகிடந்தமாற்றமுனைக்குமேலவ்வில் - *
புலிகிடந்ததூறுய்விடுமென்-றுலகறியச் - (௱௨௰)

[யாத்திரைசெய்தமைகூறல்.]

செப்பினாளவ்வையென்றுதேர்ந்தேனிராத்திரியே - *
தப்பினேன்கைக்கடங்கத்தக்கதுகொண் - டப்பால் (௱௨௰௧)
அதிசயங்களானதலம்யாவுமறிவோம் - *
நதிகள்பலமுழ்குவோநாமென்-றிதயமாய் - (௱௨௰௨)
வெள்ளைநாவல்பழுக்குமிக்கபதியுந்நரிகள் - *
துள்ளுபரியானதொருதொன்னகரும்-தெள்ளுதமிழ் (௱௨௰௩)
செப்பக்கதவுதிறந்தவூருங்கருங்கல் - *
கப்பலெனவந்தகடற்பதியும்-இப்புறத்தில் - (௱௨௰௪)
பாங்குடையவாண்டுபனிரண்டுக்கோர்கான்மா - *
மாங்கதிர்பொங்கும்வளப்பதியும்-பூங்குடத்தில் - (௱௨௰௫)
அங்கத்தைமங்கைவடிவாக்கினவூருந்தமிழ்க்குத் - *
தங்கத்தையீந்ததனியூரும்-செங்கருங்கட் - (௱௨௰௬)

காகமெரியக்கனல்வீசுமாலையும் - - *
யோகங்கழுகுசெபுமொண்கிரியும்-வேகமிக்க - (௱௨௭)
கான்முண்டுவெம்முதலைகௌவிப்புண்டபிள்ளைதனை - *
மூன்முண்டுசென்றழைத்தமூதூரும்- மான்முனேர் (௱௨௮)
நாகிக்கெழுந்ததனத்தைலிங்கமென்றொருவன் - *
பூசித்துப்பேறுபெற்றபொன்னகரும்- நேசித்து (௱௨௯)
மைந்தனுடலரிந்துமாதவத்தோர்க்கிட்டுவினைப் - *
பந்தபரிந்தோன்பழம்பதியும்-சொந்தமாம் - (௱௩௰)
ஆட்டைப்புலிகாக்குமம்பலமுநானுவசி - - *
நாட்டிதமிக்குதிக்குநன்னகரும்-காட்டையினன் (௱௩௧)
கண்ணைப்பறிகொடுத்தகற்பயுங்கண்ணுன்றன் - *
பெண்ணைப்பறிகொடுத்தபேரூரும்-மண்ணுலகில் (௱௩௨)
தீண்டாதாரொச்சில்செழுமறையோர்க்கீந்தாலும் - *
வேண்டாமெனுதேசத்குப்மெய்ப்பதியும்-மாண்டவர்தங்௱௩௩
காதிலுபதேசங்கடவுள்சொல்லும்பதியும் - *
சிதரன்மாயாபுரியுஞ்சேவித்து-நாதிக்குஞ் (௱௩௪)
சங்கமுகந்தங்கெறிதரங்கமுககங்கையுடன் - *
சங்கமுகதீர்த்தமெல்லாந்தாஞடி- அங்கிருந்து - (௱௩௫)
கங்குல்பகலாக்கடலோட்டக்கப்பலிலோர் - - *
திங்களில்வந்தெய்திளேன்சேதுவினில்-மங்காத் (௱௩௬)
தனுக்கோடிதர்ப்பசயனம்பணிந்து - - *
மனுக்கோடிருஞ்செந்தூர்வந்தேன்- கனத்த - (௱௩௭)
திருப்பதிகளொன்பதுநான்சேவித்தங்குள்ள - *
அருட்பொலியுந்தீர்த்தமெல்லாமாடித் - தருப்பொலியும்.
குற்றாலநெல்வேலிகோதைவில்லிபுத்தூர்வந் - *
துற்றேன்றிருச்சுழிகையூர்பணிந்தேன்-நெற்றிவிழித் (௱௩௯)
தம்பிரான்பூவணத்தைச்சந்தித்தேன்சங்கேந்தும் - *
எம்பிரான்சோலைமலைக்கெய்திளேன்-பைம்பொற் (௱௪௰)
றலையருவியாடியெங்கள்சங்கத்தமழகர் - - *
மலரடியைப்போற்றிமகிழ்ந்தேன்-நிலைமகிமை (௱௪௧)

யானிருவஞ்சுநாளங்கிருந்தேனங்கேயோர் - - *
ஞானியையன்றவனுடனே நட்பானேன்-மேன்மையீர் (௱௪௨)
சொக்கர்மதுரைதொழுதுவரவேநீரும் - - *
ஒக்கவரவேண்டுமெனவுரைத்தேன்-தக்கோன் - - (௱௪௩)
நகைத்தானிவ்வண்ணநடந்தகதையுண்டு - - - *
தொகுத்தமறைவேதியரேசொல்வேன்-மிகுத்தபுகழ் (௱௪௪)

[ஞானியார்நல்வழி யுரைத்தமைகூறல்.]

மேவிச்சிறந்தகொந்திவேந்தனொற்றியூர்த்திருநாள் - *
சேவிக்கப்போகமனஞ்சிந்தித்தான் - தாவில் - (௱௪௫)
அமைச்சனங்கேசென்றக்காலங்கொருத்திவல்லி - *
உமைச்சதிசெய்வாளென்றுரைத்தான்-அமைச்சனுரை (௱௪௬
மிஞ்சிநடந்தானந்தவேசைகைக்குட்சிக்கினன் - *
வஞ்சிமருந்தான்மதிகெட்டான்-குஞ்சரமும் - (௱௪௭)
நாடுநகருநவநிதியும்வாங்கினள் - - - - *
ஓடிங்குழையுமாவோட்டினள்-ஆடுகின்ற - - (௱௪௮)
கூத்தாடிகள்வன்போற்கோலம்பூண்டாடுவளைப் - *
பார்த்திரிலையோசொற்பாவலீர்-வாய்த்த - (௱௪௯)
அறைக்கண்டர்தென்மதுராகாணவென்றுலாங்கோர் - *
தொறட்டுண்டதனையான்சொல்வேன்-பொறுத்தகசம். (௱௫௰)

[மதனபிஷேகத்தின் பிறப்புணர்த்தல்.]

அஷ்டதிக்குஞ்சூழ்கோயிலாலவாய்ச்சொக்கருக்குத் - *
தட்டதெடுக்குந்தழியிலாள்-வட்டமுலை - - (௱௫௧)
மாணிக்கமாலையெனுமங்கையொருபெண்ணடிதன் - *
காணிக்குத்தேடக்கருத்தாகி-உள்ளைத் - - (௱௫௨)
தறைவெழுகியுண்டுதவங்கிடந்துமெத்தக் - - *
குறைகளெணக்குறிகள்கேட்டும்-பெறுவதற்குச் - (௱௫௩)
செப்புத்தகடெழுதிச்செம்பொற்கழுத்திலிட்டும் - - *
கெர்ப்பத்துக்காமருந்துகிண்டியுண்டும்-தப்பாத் - (௱௫௪)
திருவனந்தல்சேவித்துஞ்செண்பகப்பூவாசம் - *
மருவனந்தநந்தனங்கள்வைத்தும்-திரையுடலை - (௱௫௫)
வேற்றொருவர்கண்டுவிரும்பாதநாள்தனமை - - *
காற்றடிக்கப்பூத்தகதைபோலச்-சாற்றும் - - (௱௫௬)

அரிவைதெரிவைகடந்தப்பானடக்கும் - - *
பருவத்தேகர்ப்பம்படைத்தாள்-தலைவீழ் - - (௱௫௭)
தலையிற்கருப்பிறங்கிச்சாய்ந்ததெனத்தொங்கு - - *
முலையிற்கறுப்புமுதிரக்-கலக - - - (௱௫௮)
விழிவேல்குழியமுகம்வெண்மதியமாக - - *
எழில்மேனிபச்சைநரம்பெய்தத் - தழைகருஞ்சூல். (௱௫௯)
கொண்டவயிறுபெஞ்சைக்கூவேந்த்ரன்சத்திரத்தில் - *
உண்டுவருவோர்வயிற்றையொப்பாகத்-தண்டே - (௱௬௰)
அளிக்குடிக்குந்தாராளரும்புளியங்காய்க்கும் - - *
புளிக்குடிக்குமுன்னமிச்சைபூண்டாள் - களிக்கவயிற் (௱௬௧)
றூடுதரித்தபிள்ளைக்குள்ளாவார்வாயிலள்ளிப் - - *
போடுவதைத்தான்வாயிற்போட்டநிற்தாள்-கூடிவந்த (௱௬௨)
மாதமொருபத்தாய்வயிறுளைந்துபெற்றாளவ் - - *
வேதனையால்மூர்ச்சையாய்மெய்சோர்ந்தாள்-தாதிமார் ௱௬௩
டென்னென்றூர்காதிற்பிழிந்தமருந்ததுபோல் - *
தின்னென்றெழுந்துதுயர்தீர்ந்தாள்-வண்ணமணிப். [௱௬௪
பொற்றொடிக்கைமங்கைநலலாள்பொன்காய்க்கும்பூடொண்
பெற்றதும்போலின்றெடுத்தபெண்கொடியை - மாற்றுளார்.

[மதனாபிஷேகத்தின் வளர்ப்புணர்த்தல்.]

எந்திருகையாலெடுத்துநறுநீராட்டிப் - - *
பூந்துகிலான்மெய்துவட்டிப்போற்றினார் - வாய்த்தசங்கிற்.
சேனையுடன்வஞ்சத்திருட்டுமருட்டுமவ - *
தானப்புரட்டுந்தனம்பறிக்க-மானிடர்க்குச் - (௱௬௭)
செய்யுங்கபடுமகோதித்திரிப்புமாகாசப் - - *
பொய்யுங்கலந்துபுகட்டினாள்-செய்யபசுந் - (௱௬௮)
தேனேகனியேதெவிட்டாததெள்ளமுதே - *
மானேயென்கண்ணேமரகதமே-நானீன்ற - (௱௬௯)
பொன்னேயெனவெடுத்துப்பொற்குறங்கின்மீதேற்றி • *
மின்னேரிடையாள்விழிபரப்பி-தன்னுடலிற் - (௱௭௰).
பாப்பிட்டசொல்லிவெள்ளிட்டபட்டமெனவெண்ணீற்றுக் *
காப்பிட்டாள்சிற்றடிக்குங்காப்பிட்டாள்-சேப்பிட்ட (௱௭௧)

செய்க்குவளைக்கண்மயிலே செம்பொன்னுள்ளபேர்களைபுன்
கைக்குள்வளையென்றுவளைகைக்கிட்டாள்-திக்காப்புள் (௱௭௨)
ஒட்டிக்குளாவதுபோனுள்ளபணக்காரர்களுந் - *
பொட்டிக்குளாகவென்றுபொட்டிட்டாள்- பொட்டெனவே.
வேந்தர்புதையல்வெளியாக்குமஞ்சணப்போல் - *
வாய்ந்தவடிவேல்விழிக்குமையிட்டாள்-காந்திமுக. (௱௭௪)
வன்னக்கமலமதில்வண்டிருந்தாற்போலமகள் - *
கன்னத்தின்மீதோர்கறுப்பிட்டாள்- சொன்னதனம் (௱௭௫)
வீட்டேறப்பண்டைமுதல்மேமேலறத்தன்குடிம்பம் - *
ஈட்டேறப்பொற்றொட்டிலேற்றினாள்-தேடியுன்பால் (௱௭௬)
வாராதவாரார்வந்துமடிச்சீலைகொட்டித் - *
தாராதவராரார்தந்தணையிற் - சேராதார் - (௱௭௭)
ஆராரார்சேர்ந்துனக்குள்ளாசைகொண்டுசுற்றுதார் - *
ஆராரரொன்றுதாலாட்டினாள்-தாராட்டிச் - (௱௭௮)
சீராட்டிமுன்னிருத்திச்செங்கைகொட்டிக்காட்டிமஞ்ச *
ணீராட்டியந்திநிலாக்காட்டிப் - பாரிற் - (௱௭௯)
இளைப்பெரியநாகேந்த்ரன்கீர்த்தியைச்சொல்வாணர் - *
வளர்ப்பதுபோற்பெண்ணைவளர்த்தாள்-முலைக்குமகள் ௱௮
தள்ளிநடந்தானதுகண்டுதாய்க்கிழவி - - *
துள்ளிநடந்தாள் துயர்தீர்ந்தாள்-பிள்ளையொரு - (௱௮௧)
சிற்றாடைகட்டித்தெருவில்வரக்கண்டுதிட்டி - *
சுற்றுமலேதிட்டிசுற்றினாள்-மற்றுமந்த - (௱௮௨)
வம்பிமகண்மழலைவார்த்தையைக்கேட்டாடவனைத் - *
தம்பியென்றுசொல்லத்தலைப்பட்டாள்-அம்புபச்சங் (௱௮௩)
கைக்குவளையிட்டுக்கடகம்பவளமிட்டுத் - *
தக்கையிட்டகாதிற்றளப்பமிட்டுப்-பக்கத்திற் - (௱௮௪)
கொண்டையிட்டுக்குப்பியிட்டுக்கொப்பிட்டுக்காலில்வெள்ளி
த்தண்டையிட்டுச்செம்பொற்சதங்கையிட்டு-தெண்டரள.
மாலையிட்டிரட்டையனைஞாண்மருங்கிலிட்டு - *
வேலையிட்டசுட்டிநெற்றிமேலிட்டுக் கோலச்சிற் (௱௮௫)

நாக்கிட்டுச்செம்பவளத்தாழ்வடங்கலிட்டுவச்சிர - ❁
மூக்குத்தனுக்கிட்டுமுத்தமிட்டு-நாக்குளிர - (௱௮௭)
வாரிட்டகொங்கைமதனபிஷேகமென்னப் க - ❁
பேரிட்டுலகரியப்பேச்சிட்டாள்-ஆரியமும் - (௱௮௮)
கன்னடமுங்கட்டிக்கரும்புபோலேவடுகும் - ❁
பன்னுதமிழும்படிப்பித்தாள்-மன்மதவேள் - (௱௮௯)

[பருவக்குறிதாய்கண்டமையுணர்த்தல்.]

சிற்பரதவல்குற்சிறியாள்வயதில் - - *
நற்பரதமெல்லாநடித்தறிந்தாள்-உற்பனமாம் - (௱௯௰)
மோனவித்தையுள்ளமுனிவோரையுமயக்குங் ❁
கானவித்தையெல்லாங்கரைகண்டாள்-மேனிக்குள் (௱௯௧)
வாடைமஞ்சள்பூசுவதுமல்லிகைப்பூச்சூடுவதும் - ❁
ஆடவரைவீட்டுக்கழைப்பதுவும்-ஓடிப் - (௱௯௨)
பிலுக்குவதுங்கிட்டநின்றுபேசையிலேமுத்துக் - ❁
குலுக்குவதுங்கொஞ்சுவதுங்கொங்கைத்-தலைக்கறுப்பை. •
முந்திக்கொண்டுவெட்கம்போன்மூடுவதுங்காமுகரை - *
அந்திமட்டும்வைத்துவிளையாடுவதும்-வந்தவரை (௱௯௪)
வாள்வீச்சுப்போலவரிவிழிபால்வெட்டுவதும் - *
போள்வாய்ச்சிகண்டுடம்புபூரித்தாள்-வேளனையார் (௱௯௫)
கைக்குள்வசமாகிவந்துகாலைப்பிடிக்குமந்தச் - §
சொக்குப்பொடிமருந்துஞ்சொல்லிவிட்டாள்-சொக்கர்புது
மண்டபத்தின்முன்னேவசந்தன்திருநாளில் - *
எண்டிசையோர்மெச்சவரங்கேற்றினாள்-ஒண்டொடிக்குச்.
சின்னச்சிமிழாகிச்செப்பாகித்தேங்காயாய் - *
வன்னத்தனங்கள்வளர்ந்தேறக்-கன்னிகையாள் - (௱௯௮)
தன்னையறிந்தாள்தழியிலாள்தன்பழைய - *
பொன்னைப்பொருப்பக்கப்புதைத்துவைத்தாள்-மன்னவர்கள்.
சுற்றுவதுங்காமுகரைத்தோயமக்கட்குமனம் - §
பற்றுவதுங்கண்டறிந்தாள்பப்பரத்தி-பெற்றெடுத்த (௨௱)

[தாய்க்கிழவிபோதிப்பினைத்தல்.]

மானேயென்கண்மணியேகுயிலேசெந்.............*
தேனேமதனுடையசேனையே - மீனீன்ற..............(௨௱௧)
குஞ்சுக்குநீச்சுங்கொடும்பாம்பின்குட்டிக்கு..............*
நஞ்சுங்கொடுத்தவரார்நங்கையே - செஞ்சிலைக்கச்...(௨௱௨)
சீவகனுக்கன்றொருபெண்சிங்கமொருகன்றீனும்.........*
பாவனைபோலேயெழுதிப்பக்கத்தில் - ஓவியமாக்...(௨௱௩)
காரானையொன்றெழுதிக்காட்டவரிக்கன்றுதுள்ளிப்.....*
போராடிப்பாய்ந்தகதைபொய்யலவே - யாருக்கும் (௨௱௪)
சாதித்தொழில்தனக்குத்தானேவருமொருவர்...........*
போதிக்கவேண்டுமோபொற்கொடியே - மாதர்க்குள் (௨௱௫)
உன்புத்தியென்புத்திக்கோவிரட்டியாகிலுமென்.......*
றன்புத்திபுகலேன்சற்றேகேள் - ஐம்பதூர்க்......(௨௱௬)
கொஞ்சியபரிநகுலன்கூளேந்திரன்பன்றிடலை...........*
மஞ்சட்குளிப்பைமறவாதே - மஞ்சண்.............(௨௱௭)
மணங்காட்டியாட்பிடிக்கும்வாடைப்பொடியின்.........*
குணங்காட்டிக்கண்காட்டிக்கோலம் - இணங்கியபொன் ௨௱௮
னுத்தரியஞ்சற்றேயொருபாற்றெரியவிட்டுச்.............*
குத்துமுலைச்செம்பொற்குடங்காட்டி - முத்துநகை(௨௱௯)
காட்டிவகைகாட்டிநடைகாட்டியிடைகாட்டிநயம்..........*
காட்டியிளையோர்காசைகாட்டுவாய் - கோட்டுமுலை.. (௨௱௰)
சாய்ந்தான்முகந்திரைந்தாற்சல்லிக்காசொன்றுமுனக்...*
கீந்தாதரிப்பவராரிந்நிலைமையே - ஆய்ந்தபஞ்சுப்.. (௨௱௰௧)
பெட்டிபோலேநரைத்தபெண்கள்கையிலெல்லவருஞ்...*
சட்டிசுறண்டவருந்தலையிலே - கட்டழகின்.........(௨௱௰௨)
வாலிபத்தேதேட்டின்மனம்வைத்தாற்பொற்கட்டால்...*
வேலியிட்டுக்கட்டலாம்வீடெல்லாம் - காலைப்... ... (௨௱௰௩)
பிடிப்பார்முழுப்பிரட்டுப்பேசியிலைகீறி...............*
மடிப்பார்தருவார்வருவார் - படுக்கைவிதங்.......... (௨௱௰௪)

காட்டுவேனென்பாரக்கள்ளவண்டர்கங்களையுன் ... ... *
வீட்டிலழையாதேமெல்லியலே - வீட்டில்வந்து (௨௱௰௫)
பாபப்பட்டுவிசும்பண்ணுவார்க்குப்புழுதி ........... *
வாயிற்புகட்டிமயல்பூட்டு - நீபொருத்தர் ........(௨௱௰௬)
காசைவைத்தாற்பின்னுநத்தரண்டாருட்டெனுத்த .. *
வேலைசெய்பர்க்கில்லாதநகைப்பாமெல்லியலே - காசுபணம்.
குப்பல்குப்பலாகக்குவித்தாலும்வாலிபத்தில் ... *
வைப்பிருக்கச்சற்றுமனம்வையாதே - செப்பு .. (௨௱௰௮)
முலையைக்கசக்கிவிட்டுமுட்டாள்சரசத் ... *
தலைப்பவிர்மேபெனாயழையாதே - சிலைநுதலாய் ... (௨௱௰௯)
முன்பின்னறியார்முடிப்பாகப்பொன்னெழுநூற் *
றொன்பதுதந்தாலுமனைமொவ்வாதே - இன்பமுடன் (௨௱௨௰)
கூடுவார்தித்திரைநீகொள்வதுபார்த்துப்பொடியைப் *
போடுவார்சேலைவற்கம்பொன்னுடைமை - சோடிணையாச் ௨௨௧
சேரக்கூருட்டிப்பாற்செல்வார்விடிந்ததற்பின் *
யாரைப்போய்க்கேட்பதுநாமாரணங்கே - ஊரிலே . (௨௨௨)
தந்தைகீழ்ப்பிள்ளையுண்டுதாய்க்கீழ்ச்சிறுவருண்டு.............. *
வந்தால்டைறையவரச்சொல்லி - தந்தமதின் (௨௨௩)
வாயில்வடுச்செய்யாமல்மார்பினகம்வையாமல் *
நோயுமிதம்காட்டிசுகங்காட்டு - சேயிழையே (௨௨௪)
அந்திபடப்பணயமஸ்தம்ராக்கமாகவந்தால் ... *
சொந்தமுள்ளபேர்தமக்குச்சொல்லியே - முந்திவந்து (௨௨௫)
சாரமுண்பாம்நீயவண்பின்சக்கையத்தின்பானென்றுமுன் *
னேரமழைத்தனுப்புநேசமாய்த் - தூரத்... (௨௨௬)
திருந்துவந்துகுடிவிடிந்தேகுவார்தம்மேல் ... *
பரிந்தாசைபொருபிறகேபற்றிப் - பிரிந்திருக்க.... (௨௨௭)
மாட்டேனெயுன்னுமேலடாப்பிளைமாராசைபெல்லாம் *
போட்டேனேயென்னபொடிபோட்டாய்நீ - வீட்டில் (௨௨௮)
தனித்திருக்கப்போமோடாசாமியுன்றம்பல ... *
இனியிருக்குந்தாடாவிருடா - சனிக்கிழமைக்...... (௨௨௯)
கட்டாமேலாநீவருவாயாணையிடுமுக்காலும் ... *
தீட்டாத்தயெல்றனுப்புதார்குழலே - மைப்பொருங்கண் ௨௩௰

மாதுநல்லாய்வேறுமருந்தேனவர்திருப்பும் ... *
போதுவருமேபுதையலெல்லாம் - காதல்கொண்ட... (உருக)
மன்னவனைத்தாங்குசப்ரமஞ்சத்தின்மீதிருத்திப் ... *
பொன்னவனைக்கோமற்புல்லிருள்-மின்னரசே... (உருஉ)
ஊர்க்குஞ்சவீகைதம்மோடொத்தவர்க்குமெண்ணிக்கை... *
யார்க்குங்கனத்தகுடியாகலாம்-பார்க்குள்ளே ... ...(உருங)
புல்லுவிற்றுங்கீரைவிற்றும்பொன்கொடுப்பார்காணமக்குக்
கொல்லிமலைப்பாவாய்குலதெய்வம்-பல்விழுந்த ... (உருச)
கூனற்கிழவன்கொடுக்கும்பணமதில் .. ... ... .. *
நாணக்குழலேநலாயுண்டோ-மானமின்றி... ... (உருரு)
அப்பன்வருவானதன்பின்மகன்வருவான்... ... ... *
தப்புமுறையென்றுநீதள்ளாதே- இப்புவியில்... (உருசா)
மாலக்குலியர்வெகுமாயக்கள்ளர்தங்கள் .. ... ... *
சோலிக்குப்போகாதேதோகையே-வேலையின்றித் . (உருஎ)
தந்தையனையாரைத்தழுவிப்பணம்பறிக்கும்... ... .. *
எத்தனைநாமெத்துவதுமெத்துக்காண்-சித்ர... ... (உருஅ)
கதையைக்கேளென்பருவக்காலத்திலிந்தப் ... ... .. *
பதியிலோர்க்குச்சிலையப்பையல்-மதுரை .. ... (உருகூ)
மழுங்குணியென்னும்பேரான்மார்தனத்தைத் ... ... *
தழுவிப்பறிப்பான்தனத்தை-முழுதும் .. ... (உசய)
கிழக்குத்தெருவிளெட்டைக்கிஷ்ணஜீவீட்டைக் ... ...*
குளப்பறியாகப்பறித்தாண்கூடி-மூளைத்தெழுந்த .. (உசக)
செப்புமலைமாதேசிவிலிபுத்தூர்தாசிக் ... ... .. [ன்று
குட்டியடைமையெல்லாங்கொள்ளைகொண்டான்- வைப்பெ
தந்திரமாகப்பசப்பித்தஞ்சாவூர்செல்லிதனைக் ... ... *
கந்தைபொருத்தவிட்டான்கைம்மருந்தால்-இந்தவகை(உசங
ஆங்கவனுக்கேகொடுத்தாரல்லாதவன்பொருளை ... ... *
வாங்கினபேரில்லையென்மேல்மாலாகி-ஈங்குவந்தான் (உசச)
குன்றுமலையாய்க்கொழுத்தகுட்டியகப்பட்ட... ... ...*
தென்றுபூரித்தேயிருந்தோளும்-அன்றுமுதல் ... (உசரு)

மாட்டுப்பறங்கிக்காய்மாதே தினங்கறியாக் ... ... ... *
கூட்டிக்கொண்டாங்கவனைக்கூடியே- வீட்டில்வந்த (௨௪௬)
நாலாநாளல்லினுமிச்சாமஞ்சோதித்துக் ... ... ... *
காலிற்றெருமிசெருப்புக்கட்டியே-மேலெல்லாம் ... (௨௪௭)
வெண்ணீறுபூசியைந்துவீரசடைபின்னிவிட்டுப் ... .. *
பெண்ணீலியென்றுகண்டோர்பின்வாங்க - எண்ணமின்றிச்
சுள்ளுஞ்சோறுங்கைச்சுரிகையுமாய்ப்போய்க்கழுவிற் ... *
கள்ளன்வலதுகுதிக்கானரம்பில- மெள்ள ... (௨௪௯)
விளக்கெரித்துநெய்வடித்துவீட்டில்வந்துநன்றாய் ... ... *
உழக்கரிசிபொய்தூறவைத்துப்-புளிப்பில்லாச் .. (௨௫௰)
சாற்றிலிட்டும்பாற்குழம்பிற்சர்க்கரையிற்கூட்டியிட்டுஞ் *
சோற்றிலிட்டுநஞ்சைச்சுழலவிட்டு-வேற்றவனு ... (௨௫௧)
பாயத்தாற்றேடும்பணைப்புற்றிலேகரடி ... ... ... [க்
வாயைவைத்தாற்போலுறிஞ்சிவாங்கிவிட்டேன்-பேய்போல
கையிலுள்ளதெல்லாம்போய்க்கப்பரையொன்றேந்தியகோ
தெய்வமேயென்றுதிரிகிறான்-நெய்யரிசி .. ... ... (௨௫௩)
நாளுக்குநாள்செலவாநங்காயுனக்குவரும் .. ... .. ... *
ஆளுக்கிருக்குதின்னமாறாக்கு-வாள்விழியாய் ... (௨௫௪)
வேடிக்கையாய்மாசிவீதியிலேநாமுலவ ... ... ... *
ஆடிக்குமுன்னேயென்னாசையெனத்-தேடிநிதி ... (௨௫௫)
யுள்ளவரைமெள்ளவுபாயமாய்க்கூட்டிப்போய்க் ... ... *
கொள்ளும்பவளமுத்துக்கோவைவடம்-உள்ள ... (௨௫௬)
கடையுஞ்சவளிக்கடையும்பார்த்தையா... ... ... .. *
இடையாச்சரக்குக்கிடைத்த- தடைவாயென் ... (௨௫௭)
றுத்தவடமாலையைக்காதோலையைப்பொன்மோதிரத்தை *
வைத்தென்றனுங்கடுகவாங்கித்தா-பத்தஞ்சு... ... (௨௫௮)
வட்டிசுமந்தாலுமப்பால்வாங்கலாமென்பாயச் ... .. *
சொட்டனுக்குநெஞ்சுறுக்கென்னும்-பொட்டெனத்தன்.
கைத்தலத்தைப்பிவான்கடையிலேயுள்ளசரக் ... ... *
கத்தனையும்வாங்கியறையிலிட்டு-வைத்து... ... ... (௨௬௰)
மருந்திடுப்பிற்கட்டிவருவார்சிலர்மேல் ... ... ... *
இருந்துடம்பைவாட்டியெடுப்பார்- பரிந்தணைந்து (௨௬௧)

கைச்சரசம்போற்றடவிக்கண்டுபிடித்துடனே ... *
பிச்சுப்பிடுங்கியெறிபெண்ணணங்கே-லச்சையற .. (௨௬௨)
மன்மதநூலைப்படித்தவம்பனாயென்றுணையுன்றன் *
சென்மசென்மமுள்ளமட்டுஞ்சேராதே-சன்யாச .. (௨௬௩)
ருத்திராக்ஷப்பூணரூடர்சிலருண்டுவந்தால் ... ... *
மெத்தையிலேவைத்துவிளக்கணைத்துச்-சத்தமின்றித் (௨௬௪)
கூடையிலேயாள்வந்துகூப்பிட்டாலையர்தமைக் ... .. *
கூடையிலேமூடிவைத்துக்கூப்பிடுநீ-பாடிக் ... (௨௬௫)
கடுக்கனலைக்குங்கவிப்புலவர்வந்தால் ... ... ... ...ஃ
துடுக்காயொருவார்த்தைசொல்வார்-கொடுக்கவென்றால்.
ஐந்துபொன்னும்வாங்காரரைப்பணமேபோதுமென்பார் *
சிந்தையவர்மகிழச்செய்திட்டால்-தந்தம் ... (௨௬௭)
இசைபாடுவார்கூடாதென்றாற்கொடிய ... ... *
வசைபாடுவார்கொடுமேவாழ்வு-அசையவுளம் ... (௨௬௮)
அஞ்சுகின்றகச்சேரியாட்சேவகர்வந்தால் ... ... *
வஞ்சியவரீந்ததைநீவாங்கிக்கொள்-கொஞ்சமெனு .. (௨௬௯)
எண்ணாதேகைமுதல்மற்றென்னபோமோர்செம்பு [ணங்கே
தண்ணீர்போம்நாமிடும்பொய்ச்சத்தியம்போம்- பெண்ண
வாவென்றழைப்பார்மணியப்பிலுக்கர்சும்மா ... ...*
போவென்றுசொன்னாலும்பொல்லாப்-பாவையே .. (௨௭௧)
சாதனையாச்சேலையிலேதம்பலத்தின்சாறுமிழ்ந்து... ...*
சூதகமானேனென்றுதூரவிரு-மாதவிடா ... .. (௨௭௨)
யானநாளிற்பணயமஸ்தரொக்கங்காணிலொரு... ... *
பானைவெந்நீர்க்காகவெண்ணிப்பாராதே-நானுன்மேல் (௨௭௩)
மோகமுற்றேனீயென்மேல்மோகமில்லையென்றுசிலர் .. *
தோகைநல்லாயுன்கருத்தைச்சோதிப்பார்-ஓகோநீர் (௨௭௪)
என்னமாச்சொல்லவந்தீரென்னாசையும்மேலென் .. ... *
றன்னமேயென்றலைதொட்டாணையிடு-சொன்னவந்தட் (௨௭௫)
பொய்யாணையாற்சீவன்போகுமேதாயாரெனக்குத்... .. *
தையாலவ்வாணைதயிர்ச்சாதம்-கையில் ... (௨௭௬)

இருட்டினிற்செல்லாப்பணத்தையீந் துபடுத்துக் ... *
கருக்கலிலேபோவானைக்காட்டித்-தரச்சொல்லு .. (௨௭௭)

வாயமட்டாட்டே சிணுங்கமானேமுசலின்மேல் ... ...*
நாயைவிட்டாற்போலெழுப்பிதம்மைவிடு-கோயிலுக்குள்.
நம்பியாரையனுடனாண்டுதம்பியார் ... ... *
நம்பியனைக்கூடிச்சஞ்சரிநீ-அம்பெனுங்கண் ... (௨௭௯)
மைவிஸ்தாரக்குயிலேவாய்விஸ்தாரக்காரன் ... ... *
கைவிஸ்தாரக்காரன்கையைவிடு-செய்யுடமைறைக் ... (௨௮௰)

கட்டளையார்வந்தாலுன்கைம்மருந்தாலேபறிவைத் .. ...*
தட்டழிபப்பண்ணித்தனம்பறிநீ-அட்டவிலே ... (௨௮௧)
சோறுசமைக்குஞ்சுயம்பாகிவந்தக்கால் ... ... *
வேறொருவேளாண்மைவேண்டுமோ-சாறும் .. (௨௮௨)

பருப்படியுஞ்சப்பாவும்பார்குழம்புநெய்யும் ... ...*
வரும்படிந்தகட்டளையாய்மானே-தரும்பொருளை (௨௮௩)
வெம்பளிக்கைபண்ணுதேவெஞ்சினப்பண்டாரிவந்தா ...*
லும்பளிக்கையூர்வத்தையொக்குமே-சம்பளத்தைக்.(௨௮௪
கூட்டிச்சமைத்திவப்பான்கோயிற்கணக்கனுந ... .. *
வேட்டைப்போட்டுப்போகவீட்டிலழை-ஆட்டுவிக்கக்.(௨௮௫

கால்பிடித்தநட்டுவனார்கையைப்பிடித்தழைத்தால்... ...*
வேல்படைத்தகண்மயிலேமேவிவிடு-சாலநெடு .. (௨௮௬)
நேரஞ்செல்லாமனெடுநீங்குடசைக்காரனுடன் ... ... *
நேரமழைத்தனுப்புநேசமாய்ச்-சாரமுள்ள... ... (௨௮௭)
நாடகத்துப்பாங்குநடைக்குநடத்துவிக்கும் ... ... *
பாடகனையுந்தனதுபண்ணிக்கொள்-கூடுதித்திக்... (௨௮௮)
காரனையுங்கைத்தாளக்காரனையுமெக்காளக்... ... *
காரனையுங்கூடியிதங்காட்டாதே-தூறு ... (௨௮௯)
தலையராய்க்கைத்தாழைத்தம்பியராய்ப்பிறற் ... ... *
கலைபராயுன்னழகைக்கண்டு-விலைகொடுத்தால் ... (௨௯௰)

வாங்குவாய்சற்றேமருவுவான்பேய்ப்படுவான் ... *
தூங்குவான்போவான்சுகமறியான்-பூங்குயிலே......(௨௯௧)

முஞ்சத்தினீயுமொருமாய்பிளையுமாயிருந்து ... *
மிஞ்சுசரசத்திலொருவேற்றுள்வந்-தஞ்சாறு ... (உகூஉ)

தந்தாலனைச்சமையல்வீட்டிற்பதுக்கிச் ... *
செந்தேனேமெல்லச்செறுமுவேன்-வந்தனைந்து ... உகூ௩)

கொல்லைக்குட்போனகுணம்போற்கைகாலப்பி ... *
மெல்லப்போநம்மையெவர்வெல்லுவார்-நல்ல (உகூச)

உடந்தையாகத்திரிந்தவுத்தியோகஸ்தர்க் ... *
கிடைஞ்சலவந்தாலுமுனையும்வந்தேப்பார் - மடந்தையே.

காணிக்கைபானேனுங்கண்டியைத்தாதண்டையைத்தா ... *
மாணிக்கமாலையைத்தாவைத்துநான்-காணிக்கை (உகூரு)

தீர்ந்தமறுமாதந்திருப்பித்தருவனென்பார் ... *
ஏந்திழையேநீசற்றிணங்காதே-காந்தாரி ... (உகூ௬)

தாய்க்கிழவிசம்மதித்தாற்சம்மதமென்பாரென்று ... *
வாய்க்குட்பயந்தவர்பின்வாய்ப்பேசார்-நோக்கமாய் (உகூஎ)

என்னைக்கலந்தவர்களென்றாலுங்கைநிறையப் ... ... *
பொன்னைக்கொடுத்தாற்புணர்ந்துவிடு-பின்னே ... (உகூஅ)

பறவைமிருகங்கண்முறைபார்க்குந்தாவேசி ... *
முறைபார்க்கவேபிழைப்புமோசம்-சிறும்பாதே ... (கூா)

தேடியல்லோவன்பிற்சிலம்பியென்றுமன்னவனாக் *
கூடுதிருவாரூர்க்கொண்டியென்றும்-ஆடவரைத் ... (கூாக)

தெட்டும்பெருங்குண்டைத்திம்பியென்றுங்கொண்டையிற்
மட்டுண்டவொற்றியூர்வல்லியொன்றும்-சிட்டர்தொழும் [பூ

பூவணமாப்பொன்னகரிப்பொன்னனையாளென்றுமுடற் [மூழ்ப்
பூவணமாந்தென்னூரூர்ப்பொன்னியென்றும்-தேவர்தொ

சொக்கேசர்கோயிற்றுணைக்கொடியென்றும்புவிக்குள் *
மிக்கானபேர்படைத்தார்மெல்லியலே-அக்காலம் ... (கூாச)

வண்ணமாற்றுப்பசும்பொன்வாங்கவொருத்திசெய்த ... *
இன்னமாற்றுக்கதையைக்கேட்டிலையோ-பெண்ணணங்கே.

என்றிப்படித்தாயிப்பிஞ்ஞ்புத்தியதை ... ... *
யன்றிப்படித்தாளனைப்புத்தி - அன்றுமுதல் (கூாரு)

[மைதுனபிஷேகத்தின்செய்திகூறல்.]

காதன்மதமீறிவருங்காமுகராம்யானைகளைக் ... ✻
கோதுமுகிரங்குசத்தார்குத்தியிதம்-ஓதியந்த ..., (௱௭)
மாரனரமனைக்குள்வைத்தணைத்துச்சேர்ந்துரச ... ✻
சாரக்கரும்புதனையூட்டி- மூரல்வாய்த் ... (௱௮)
தம்பற்கவளந்தனைகொடுத்துக்கும்பமுலைக் ... ✻
கம்பத்துடன்பிடித்துக்கட்டினாள்- அம்பரத்தீ .. (௱௯)
மூட்டிவிக்கும்யோகமுனிவோரையும்பொம்மல் ✻
ஆட்டுவிக்குந்தோலுருப்போலாக்கினாள்-தீட்டியவேல்௱௰
வண்ணக்குடையரசர்மாநிதியாமுந்நீரை ... ✻
உண்ணக்குறுமுனியையொப்பானாள்-பெண்ணுக்குத்.

[அவளதுதோழிகளைக்கூறல்.]

தோழிமார்கைமருந்துசொக்கியென்றுஞ்சாராயத் ✻
தாழியென்றுந்தாதுசவுந்தியென்றும்-ஏழுமதி ...(௱௰௨)
லேறியென்றுந்தஞ்சாவூரெத்தியென்றுமாமாயக்... ✻
காறியென்றுங்குண்டுணிவாய்க்கள்ளியென்றும்- மாருட்டக்.
குள்ளியென்றுமாயக்குருவியென்றுமாரீசக் ✻
கள்ளியென்றும்பத்துப்பேர்காமுகரை-மெள்ளப் (௱௰௪)
பொருத்துவாரூடலாய்ப்போவாரைமோடி.. ✻
திருத்துவார்தாராளாச்சிம்பித்-துரத்துவார் (௱௰௫)
கல்விலேநாருரித்துக்காண்பார்நனைத்தவிடங் ... ✻
கல்லுவார்தாமுமொருகைப்பார்ப்பார் - மெல்லிநல்லார்.

[அவளைவிரும்பியஆடவர் செய்திகூறல்.]

இவ்வாறுசெய்யவிருதிறியந்தேடுமந்த ... ✻
மைவார்விழியாண்மதிநுதற்குஞ்-செவ்விக் (௱௰௭)
கொடியிடைக்குநிலவெறித்தகுறுநகைக்குமொயில் விளைத்த
பிடிநடைக்கும்வயிரமிட்டப்ரபைமிகுத்த- தொடிகளுக்கும்
அலையுதித்தவமுதெனச்சொலருமொழிக்குமிருவிழிக்குஞ் ✻
மலைகளொக்குமுலைகளுக்குமனதுவைத்து - வலையினுக்குள்
மான்சிக்கினாற்போல்மருள்வாருந்தூண்டிவிலே ✻
மீன்சிக்கினாற்போல்மெலிவாரும்-என்சிக்கிக் (௱௨௰)

கொண்டோமென்றுள்ளங்கொதிப்பாருங்கூடியின்பங் ... ✻
கண்டோமென்றுள்ளங்களிப்பாரும்-கண்டனைய ... (௩௨௧)
பேச்சுமடந்தைக்குப்பிடிக்குமனதாசையென்று ... ... ✻
பூச்சுமருந்திட்டணையப்போவாரும் வாச்சுதென்றே (௩௨௨)
யார்க்கும்பொடிபோடுமாயிழைமூன்வாடைமணம்... ... ✻
சேர்க்கும்பொடிபூசிச்செல்வாரும்-ஊர்க்கிணங்கத் (௩௨௩)
தந்தனத்தைமீந்துசரிந்ததணக்காரிபண்ணுந் ... ✻
தந்தனத்துக்குள்ளாய்தளர்வாரும்-தந்திரமாய் ... (௩௨௪)
மாதைப்பசப்பவென்றுவாசல்மட்டும்வந்துநளாப் ... ✻
பூதத்தைக்கண்டகலப்போவாரும்-கோதாயுன் ... (௩௨௫)
கால்பிடிக்கவோவடப்பைகட்டவோசண்பகப்பூ... ... ✻
மேல்பிடிக்கவோவிசிறிவீசவோ-கோலமலர் .. (௩௨௬)
கட்டவோகட்டழகிகண்ணுறங்கப்பொற்குறங்கு ... ✻
தட்டவோவென்றருகிற்சார்வாரும்-வெட்டிவேர்... (௩௨௭)
மண்டுகுழலாள்குளித்தவாடை மஞ்சணீரையள்ளிக் ... ✻
கொண்டுதலைமேற்றெளித்துக்கொள்வாரும்-அண்டர்பிரான்
சன்னிதியிற்சற்சடியிற்றள்ளுண்டுவீழ்வார்போற் ... ✻
பின்னுகுழலாளைப்பிடிப்பாரும்-பின்னொருத்தன்...(௩௨௯)
வீட்டிலிருக்கவெளியிலேநின்றுசல்லை ... ... ✻
காட்டித்திரிந்துகளைவாரும்-வீட்டிறப்பை ... (௩௩0)
அண்டிக்கலவிசெய்யுமாரம்பங்கேட்டுவெட்டித் ... ... ✻
துண்டித்தாற்போலத்துடிப்பாரும்- கண்டனையாள் (௩௩௧)
சோதிமுகமஞ்சள்துவண்டதுகிற்போர்வையுடன்... ...✻
வீதிதொறுப்போய்ப்பிதுக்கிமீள்வாரும்-காதளவு... (௩௩௨)
மைப்பட்டகண்ணிசப்ரமஞ்சத்தின்மேற்காலைத் ... ... ✻
துப்பட்டிகொண்டுதுடைப்பாரும்-செப்பமுள்ள...(௩௩௩)
தெப்பத்திருநாளிற்றெப்பக்குளத்துமங்கை .. ... .. ✻
தெப்பத்தேயேறிவருஞ்சீராட்டில்-அப்பம் ... (௩௩௪)
வடைசுகியன்மோதகங்கள்பணியாரம் ... ... ...✻
கடையிலேகொண்டுமடிகட்டிச்-சடுதியிற்போய்.. (௩௩௫)

நாரிகையிலேகொடுக்கநாட்வடமோடுமாந் ... ...
வாரியிலேமேயாடிவருவாரும்-பேராம் ... ... (௫௫௬)
வசந்தன்திருநாளிலமண்டபத்தின்மங்கை... ...
இசைந்துநடம்புரியுமெல்லவை-நசங்காமல் ... (௫௫௭)
மல்லிகைப்பூச்செண்டுமெருக்கொண்டுசந்தடிலையை ... ..
மெல்லவிலக்கிவரும்வேளையிலே-நல்லபடைக் ... (௫௫௮)
கம்பாலடிப்பட்டகஸ்திஞ்ஞெந்தடம்பு ... ... ...
செம்பாலெலாமுகத்திரிவாரும்-தம்பிரான் .. ... (௫௫௯)
பல்லக்குக்கூடியபதிணைறுநாழிகைமேல்... ...
வலமொக்குங்கொங்கைவளவுக்குச்-செல்லுகையிற் . (௫௬௰)
முக்கல்வாய்காட்டிக்கொடுக்கத்தலையாரி ...
கைக்குளகப்பட்டுக்கட்டுண்டு-கக்குரத்தம் ... (௫௬௧)
மூக்கிற்டொழுகுமுழங்கையிடிபட்டுநெஞ்சிற் ...
கீக்கட்டிக்கொண்டுதிரிவாரும்-தாக்குபஞ்சத் (௫௬௨)
தேயொருவன்வீட்டிலிருக்குவதுகொண்டுமற் ...
போயொருவன்வீட்டிற்புகுதவேநியாயமற்ற ... (௫௬௩)
பூசல்விளைத்துப்பொருமையிலுமல்லவாது ...
மேபசிவெளியிற்பிறப்பட்டு-மோசமுடன் ... (௫௬௪)
டாநொந்துந்திக்காய்பொருதவாலியுஞ்சுக்கிரீவனும்போல்
வீதியிலேமற்கட்டிவீழ்வாரும்-சாதிமைத்தி (௫௬௫)
வட்டிவெளிச்சமிணும்மினன்வர்த்தியர்முன் ...
கட்டியங்கள்கூறக்கநடையாத்-தொட்டிவரும் (௫௬௬)
பாதக்குரட்டிற்பவளக்குமிழிலங்க ... ...
மாதுமைவனாக்குள்மன்னர்வருள்-போதிலந்த.... (௫௬௭)
வீட்டிற்பரமேணதிமேவுந்தொழிலமளி .. ...
கேட்டுப்பதுங்கிக்கிடப்பாரும்-பாட்டிளஞ்சொன் (௫௬௮)
மாங்குயிலைப்போலமருவக்கனவுகண்டு .. ...
தூங்கைகயிலேபிந்திரியஞ்சோர்வாரும்-ஈங்கிவளுக் . (௫௬௯)
கேபவகைகாமேணுபிரதம்பொன்னுக்குவது ...
பாயவென்றுசித்திரம்பலகூட்டித்தீயிற் ... (௫௭௰)
குலைகயிலேவைத்துக்குனித்தூதிவாதப் ...
புகையிலழுப்பட்டுப்புகைந்து-நிகையெரியா (௫௭௧)

மாலைக்கண்ணுநிமதிமயங்கித்தங்கள் ... ... *
காலைக்கண்ணுக்கிவழிகாணபாரும்-வாலிபத்தில் ... (௫௨)
பூணூர்முலையாட்காப்பொன்திருடிக்கையிரண்டும் ... ... *
சாணுகக்கண்டுதளர்வாரும் வாணுதற்காத் .. ... (௫௩)
தாங்கன்னமிட்டுத்தலையைக்கடைக்காசு ... ... *
வாங்கென்னவிட்டலைமாய்ப்பாரும்-தூங்கிவிழும் . (௫௪)
வண்ணானைமயிரும்மாதவிடாய்த்தம்பலமும் ... ... *
பெண்ணைத்தலையோடும்பின்னையன்றும்-சுண்ணாம்புப்.
பானைபோலேநனைத்தேபாவிபடிக்கைத்தலத்திற் ... *
பூனைபோற்றோண்டிப்புதைப்பாரும்-மாலனையாள். (௫௬)
இட்டமருந்தாலிருமல்பிடித்தோயாமற் ... ... *
குட்டியிட்டநாய்போற்குரைப்பாரும்-ஒட்டியபுண். (௫௭)
என்பவர்க்குநாணியிரசந்தின்றின்கரும்பு ... ... *
தின்பவர்க்குநாணித்திரிவாரும்-பொன்சரிகைச் ......(௫௮)
சேலைகொடுத்ததற்குச்சீமாட்டியென்கொடுத்தாள் ... ... *
சூலைகொடுத்தாளென்றுசொல்வாரும்-மூலவளா .... (௫௯)
யாப்புக்குச்சத்திரமிட்டாவிக்காக்கக்காக்காய்த் ... ... *
தோப்பிற்கிடந்துதுடிப்பாரும்-மாப்பிள்ளைமார் ... (௬௰)
வைத்தநகக்குறியைமங்கையிருகொங்கையிற்கண் .. ... *
டெய்த்துநெடுமூச்செறிவாரும்-முத்துமுத்தாய்ப் . (௬௧)
பேசினும்போதுப்பேதைநமைத்தூஷணமா ... ... *
யேசினும்போதுமென்பாரும்-பாசிழையாள் ...(௬௨)
சொந்தலரும்பூவணைமேற்கும்பகர்ணலீலைசெய .. ... *
இந்திரன்போற்பக்கத்திருப்பாரும்-ஐந்துபத்து ....(௬௩)
மாடுவிற்றேநாறுமறிவிற்றேம்மூடமந்தை .. ... ... *
ஆடுவிற்றேம்வீட்டிலடிமைவிற்றேம்-தேடரிய .. (௬௪)
வெண்கலத்தாற்குத்துவிளக்குவிற்றேங்காணிவிற்றேம் ... *
உண்கலத்தைவிற்றேமுடைமைவிற்றேம்- பெண்செல்வுக்.
கென்னத்தைகேட்கவந்தாலென்னத்தைநாங்கொடுப்போம் *
என்னத்தைச்சொல்லுவோமென்பாரும்-முன்னெபிந்த. ௬௬

பின்னாசைகொள்ளாமல்வீணுக்குக்கொண்டோமிச் ... ... *
சின்னாசையென்றுதளர்வாரும்-என்னசெய்வோம்... ...(௩௱௭)
பங்கைவிற்றுமீந்தோம்பணமினுந்தாவோவென்றாள்..... *
எங்கேசுமையெடுப்பாமென்பாரும்-ரங்குனுக்கு...(௩௱௮)
தித்திலோனுகாசுசெல்லோனுபோங்குனுநாம்... ... *
இத்தனையுந்தோற்றிழந்தோமென்பாரும்-அத்தையார்(௩௱௯)
சூளைமகளுநன்னுசொர்ணவெல்லாதக்கொண்டு... ... *
நாளையென்றுளென்றுமனைநைவாரும்-நாளிலே... ...(௩௱௰)
பாண்டிநாட்டிச்சிபணமூறுஞ்சினள்தாங்கள்... ... .. *
ஆண்டியானேமென்றலைவாரும்-ஆண்டியர்தம்... ...(௩௱௰௧)
தொண்டுபோய்வேடம்போய்த்தோளைக்குடையவனாக்... *
கொண்டுபோய்க்கையிற்கொடுப்பாரும்-கண்டசெட்டு. ௩௱௰௨
மோசமாச்சுக்காண்மூகனுக்குப்புல்வாண்டைக்... ... *
காசுமில்லையென்றுகரைவாரும்-வேசியிவட் .. ... (௩௱௰௩)
கீந்தபொருளைவட்டிக்கீந்தோமேநாமிருக்க... ... ... *
வாய்ந்தமச்சுவீடுகட்டிவைத்தோமே-கூந்தலிளம் .. (௩௱௰௪)
பேடைமயில்போல்வீட்டுப்பெண்டாட்டிக்கேயுடைமை *
சோடினையாப்பூட்டிச்சுகித்தோமோ-ஆடுகொண்டு . (௩௱௰௫)
விட்டோமோமாடுகொண்டுவிட்டோமோதெய்வத்துக் ... *
இட்டோமோதேசியென்பார்க்கீந்தோமோ- அஃதிட்டதிக்கும்.
நாடிப்புகழ்பெரியநாமகன்போற்பாமாலை .. ... ... *
சூடித்தியாகஞ்சொரிந்தோமோ-தேடுநிதி... ... (௩௱௰௭)
தன்னைக்கொடுத்துத்தரித்திரத்தைவாங்கினேம்.. ... *
என்னவியாபாரமென்பாரும்-இன்னவகை... ... (௩௱௰௮)
காமுகரொல்லாமயங்கக்காளத்தியையன்மகன்... ... ... *
ஆமொருவனிவ்வூரனுதியையன்-சேம... ... ... (௩௱௰௯)
மதுரைக்கொருநாள்போய்மாசித்தெருவில் .. ... ... *
விதிவசத்தாற்கண்டாநம்பின்னே-மதிநுதலாள்... ...(௩௱௨௰)
மைபதுக்குள்வீழ்ந்தான்வடுச்செய்தமாமரத்தில் .. ... *
மெய்யுரிஞ்சப்போய்க்கவரிவீழ்ந்தாற்போற்-கையில்(௩௱௨௰௧)

இருந்ததென்னாட்வீட்டிலிருந்ததெல்லாமாஸ்தி ... ... *
இருந்ததெல்லாந்தோற்றுவிரந்தான்-மருந்தினாற் ...(௫௮௨)
கள்ளுண்டார்போலக்கலங்கினான்வாசலிலே... ... ... *
தள்ளுண்டான்றன்னொழுக்கந்தப்பினான்-விள்ளுவதென்.
ஆதிபையனென்னும்பேரன்றேபோயிப்பால்வி .. ...*
யாதியையனென்னும்பேராயினான்-பாதி... ... (௫௮௪)
யுடலாகியொட்டியபுண்ணுள்ளுருக்கயார்க்கும் ... ...*
தொடலாகாச்சீச்சிரங்குசூலே-கொடிய ... ... ...(௫௮௫)
அரையாப்புமேகவட்டையண்டத்துவாதம் .. .... ...*
புரைவாய்ப்பவுத்ரம்புகைச்சல்-இருமல் .. ... (௫௮௬)
இளைப்புப்பொடுகுமருந்திட்டநோய்பித்தம்... ... ...*
களைப்புமாய்ப்பூனைபோற்கத்திக்-கிழக்கே... ... (௫௮௭)
அடுத்தமனையிலருகுதிண்ணைதன்னிற் ... ... ... ...*
படுத்துக்கிடக்கிறான்பாரும்-படித்தவரோ... ... (௫௮௮)
இப்படியாத்தேடியுண்ணுமேந்திழையாள்வாழ்மதுரைக் . *
கெப்படிபோவீர்வருவதெப்படிகாண்-செப்புமவ. (௫௮௯)
தானியையரோவென்றுதக்கபுத்திபோதிக்க... ... ... *
ஞானியையரைப்பார்த்துநான்விரத்தி-யானேன் .. (௫௯௰)

[அவதானிடத்துணைக்கேகினமைகூறல்.]

இருப்புத்தூணிற்கறையானேறுமோபோம்போம்... .. *
நெருப்பிற்புழுவிழுமோநீரோன்-கருத்தை... ... (௫௯௧)
அறியீரொன்றேனல்லதையரோவென்று .. ... ... ...*
பிறியாமல்வந்தாரொன்பின்னே-நெறியினிற்போய்... (௫௯௨)
வையகமேலெய்தியசீர்வைதிகநூன்மெய்யொலிசேர் .. ...*
மொய்திலாநீர்வையையில்யான்மூழ்கிரோ-உய்யப் ...(௫௯௩)
படிபுமடியவர்கொடியபடிறுசெயுமிடர்முழுதும் ... *
அடருமெழுகடலினிடையாடிக்-கிடையாப்... ... (௫௯௪)
பாத்துக்கேவிருப்புற்றோர் பவத்துக்கோர் நெருப்பொப்பா
ம், அருட்பொற்றமரைக்குட்போயாடி- எருச்செபிக்கும்.
ஐந்தெழுத்தைச்சிந்தைவைத்திட்டன்பருக்குச்சஞ்சலத்தை *
சிந்துவசித்திக்குஞ்சரத்தைத்தெண்டனிட்டுக்-கந்தபுஷ்பக்.

கற்பகமெனப்பொலிகடம்பநிழலிற்குலவும்... ... ...*
அற்புதகயற்கணுமையைத்தொழுது-சிற்பரத்தில் ...(௫௯௭)
நேசர்மனவாசர்பவநாசர்கயிலாசர்சுக... ... ... ...*
தேசர்மதுரேசரடியான்போற்றி-நேசமுடன் .... (௫௯௮)
துங்கப்ரகாரத்தைச்சுற்றிவடகுடபாற் ... ... ... ...*
சங்கப்புலவர்தமையேந்தி-எங்குமுள்ள ... ... (௫௯௯)
தீபமாபாதகஹரேந்திரத்தீர்த்தம்பருகி ... ... ... *
நாயகர்பொற்கோபுரத்தைநாணீங்கி-ஆயிரக்கால் ... ... (௬௱)

[மதனபிஷேகத்தைக்கண்டுமருண்டமைகூறல்.]

மண்டபத்திற்கண்டேன்மதனபிஷேகத்தை .... ... .. *
விண்டலத்தைவிட்டுவந்தமேனகையைக்-கொண்டைச் (௬௱௧)
சொருக்கழகுமுத்துத்துராயழகுஞ்செவ்வாய் ... ... *
முருக்கழகுஞ்சேலைமுகப்பிற்-கருக்கழகும் ... ... (௬௱௨)
வேலழகுபோன்றவிழியழகுந்தன்னையிட்ட ... .. ...*
காலழகும்பொற்கடகக்கையழகும்-ஓலையிட்ட ... ...(௬௱௩)
காதழகும்வச்ரமணிச்சிறுக்குமார்பழகும் ... ... *
சோதிமுகத்தழகுந்துங்கரத்ந-மாதுரதி ... ... (௬௱௪)
கட்டழகும்பொட்டழகுங்கச்சைகட்டிவந்தகட்டு ... .. *
மட்டழகுங்கண்டுமயங்கினேன்-கிட்டவந்த ... ...(௬௱௫)
களவாணியப்பயலேகண்ணை-இளறட்டோ ... .. (அ௱உ)

பின்னைசைவேண்டாம்புறப்பட்டுப்போவென்றாள் ... *
அந்நேரமோர்வடுகனுபுசமும்-கன்னப் ... (அ௱ங)

பரிசையுந்தன்காலிலேபாப்பாசும்போட்டுப் ... *
பெரியபட்டைநாமமுந்தன்பின்னே-ஒருவனுமாய்ச் (அ௱ச)

அக்கத்தில்வாளிரிக்கிக்காச்சுழச்சென்றுவந்தான் ... *
பக்கத்திலேசலிகைபாராட்டி-வெட்கமறத் ... .. (௮௱௫)
தாடாதகூத்தெல்லாமாடியேயம்பலத்தில் ... ... ... *
வாடாவென்றென்னைவரட்டுத்தோய்ப்-பாடி ... (௮௱௬)
மடியைப்பிடித்தாள்மயிரைப்பிடித்தேன் ... *
தொடையிலடிப்பட்டதவள்தோற்பை-மடிநழுவித் . (௮௱௭)
தொங்கியகைவாலமென்றுதூக்கிச்சுருட்டியெடுத் ... *
தங்கையிலுற்கக்கத்தடக்கினேன்-மங்கையென்னைத் (௮௱௮)
தள்ளினளஞ்சாறுதாக்கினேன்பொக்கவாய்க் ... *
குள்ளிபிடித்தாள்குடுமியை-உள்ளுநரார் ... ... (௮௱௯)

[சபையேறினமைகூறல்.]

கூடவிலக்கிவிட்டார்கூத்தெல்றம்பலத்தில் ... *
ஓடினேனாலுருடன்சென்றேன்-தாடகைபோற் ... (௮௱௰)
போயப்பொழுதேபுதுமண்டபத்திலந்தக் ... *
கோயிற்றலத்தாரைக்கூட்டிவிட்டாள்-வாய்விட் ... (௮௱௰௧)
டழுதாள்மகளையருகேநிறுத்தித் ... ... .. *
தொழுதாள்மடைமாறிசசொல்வாள்-பழியஞ்சிப் .. (௮௱௰௨)

[கிழவிஅறிவிப்புக்கூறல்.]

பட்டரோதேவேந்த்ரபட்டரோமீனாக்ஷி ... ... *
பட்டரோசாமாக்ஷிபட்டரோ-இஷ்டநர ... (௮௱௰௩)
சிங்கையரோநாரணையதீக்ஷிதரோசெவ்வந்தி ... ... *
லிங்கையரோவெங்கள்சொக்கலிங்கையரோ-சங்கரா ... (௮௱௰௪)
சாரியாரோவனந்தசாஸ்திரியாரோசைவிஸ் ... ... *
தாரியாரோகோயில்ஸ்தானிகரோ-ஊருக்குள் ... (௮௱௰௫)
நியாயமிலையோநடுவிலையோபார்ப்பாரய் ... *
பேய்ப்பிடித்ததேயென்றுபெண்பிள்ளையைக்-கோயிலுக்குள்.
அஞ்சாறுமாதமாய்யாடிப்பாடித்திரியச் ... ... *
சஞ்சாரங்கண்டீரோசர்ப்பனையாப்பஞ்சமாய் ... (௮௱௰௭)
பாவியிந்தப்பார்ப்பான்பணயங்கொடுத்தொருநாள் ... *
மேவியிருந்தான்விடிந்தவுடன்-போவானென் ... (௮௱௰௮)

றெண்ணினேனென்னமருந்திட்டானோவென்னவகை..... *
பண்ணினானோமதநூல்பாடமோ-பெண்ணணங்கை.(௮௱௰௯
வைப்பென்றுபேரிட்டான்வட்டிலிற்கஞ்சிக்குமகள் ... *
உப்பென்றுகேளாதுபாயமிட்டான்-கைப்பிடித்துக்(௮௱௨௰
கொண்டானைப்போலக்குடிலமிட்டான்ஆண்பூண்டு ... ❁
கண்டாலும்பேசாமற்கட்டிட்டான் - ஒண்டொடிக்கு ௮௨௧)
வாடைப்பொடியிட்டான்வாய்ப்பூட்டெனக்குமிட்டான் .. *
கோடைச்சுழித்துவைத்துக்கொள்ளையிட்டான் - மாடாயோர்
பட்டிவைக்கிறேன்பலதொம்பைக்கூட்டிச்சம்பாநெல் ... *
கட்டிவைக்கிறேன்பொற்கடாரங்கள்-எட்டேழு ...(௮௨௩)
தூங்கவைக்கிறேனென்றான்சோத்துக்குத்தூங்கவைத்தான் *
ஏங்கவைத்தானம்பலத்திலேற்றிவைத்தான்-வீங்கவிவன். ௮௨௪
இங்குவந்தநாண்முதலாம்யது கொடுத்தான்றனக்குக் ... ❁
குங்குமச்சம்பாவரிசி கொள்ளவென்றும்-பொங்கலுக்குப்.
பாசிப்பயறென்றும்பாலென்றுநெய்யென்றும் ... ... *
தோசைக்குளுந்தென்றுஞ்சோமனென்றும்-பூசுவதுக்.௮௨௫
காணசவ்வாதென்றுமலகுபாக்கென்றும்ரச ... ... ❁
பானவர்க்கமென்றும்பகலிரவா-ஏனோ ... ...(௮௨௭)
படுக்கைக்குவாழைப்பழமென்றுங்கேட்பான் ... ... ❁
கொடுக்குங்கடன்போற்கொடுத்தேன்-மடக்கொடியாள்.
பொட்டழியக்காதிற்பொகடியொருசோடழிய ... .. ❁
ஒட்டொழியத்தோற்றேனுடைமையெல்லாம்-பட்டிமகன்.
மோகினிமந்திரமுழுதுமறிவான்மதன ... ... ... *
னாகமங்களெல்லாமவதானம்-நாகரிகப் ... . (௮௩௰)
பொட்டறிவானுந்தண்டுப்பூச்சறிவானும்போகக் ... *
கட்டறிவானொருநாள்கைவாளத்-தட்டறையிற் ... (௮௩௧)
சோதித்தேன்சின்னமயிர்த்தோலுநரிக்கொம்பும்வி ... *
பூதிக்கிழியும்பொடியுமதில்-ஏதுக் ... ... ... (௮௩௨)
குருட்டிவைத்தானோசிலதுவுண்டையுநான்கண்டேன் ...*
திருட்டுப்புரட்டனென்றுதேர்ந்தேன்-அரைக்காசுத். (௮௩௩)

தொண்டனிவனம்பலத்திற்சோதிப்பானொன்றிங்கே ... *
கொண்டுவருவானேகொண்டுவரான் - வண்டனிவன் (௮௱௪)

மானேர்விழியணங்குமாதவிடாயானக்கால் ... ... *
தானேவிடவருவான்தண்ணீரா-மானுஷிமேல் ....(௮௱௫)

அல்லும்பகலுமடைத்தகதவைத்திறவான் ... ... *
மெல்லுபலைச்சற்றும்வெளியில்விடான்-சொல்லுவதென்.

பத்துவிசையாம்பகலுக்கும்ராத்திரிக்கும் ... .. *
பத்துவிசைக்குமென்றன்பாவைப்போல்-உத்தரிக்க (௮௱௭)

ஆர்க்குமுடியுமிவனாலுமுன்பிறப்பில் ... ... *
ஊர்க்குருவிபோபெண்ணுடம்பிலே-தீர்க்கவொண்ணா.

நோவொதுங்கவிட்டானாறுவயதுப்பயிர்க்குப் ... .. *
பூவொதுங்கவிட்டான்பொறுபொறென்று-பாவிமகன்.

சொர்ணங்கொடுப்பனென்றுசொன்னதுவுண்டல்லாமல் *
என்னகொடுத்தானிதுவரைக்கும்-என்மகட்கு ... (௮௱௰)

மோகங்கொடுத்தான்முலையரையாப்புக்கொடுத்தான் ... *
மேகங்கொடுத்தான்மெலியவிட்டான்-ஆகம் ... (௮௱௰௧)

சிரங்கானுள்தப்பிபிட்டதீமருந்தால்மாது... ... *
குரங்கானுள்குத்திரும்பல்கொண்டாள்-மருந்து ... (௮௱௰௨)

கொடுப்பவரார்புண்ணுக்குக்கூசாமற்கிட்டப்... *
படுப்பவராரென்மகளைப்பாவி-கொடுத்தானே... ...(௮௱௰௩)

கேட்டுவந்துசேருஞ்சிறுவயதிற்போக்கறுவான் ... *
வீட்டிற்புகுந்தான்விடுதிபோல்-நாட்டமாய்க் ... (௮௱௰௪)

கூடவந்தங்கிந்தக்குடுமித்தலையைக்கண் ... ... *
டாடவர்களெல்லாமகன்றுவிட்டார்-தேடாமல் ... (௮௱௰௫)

நித்திரைக்குப்பொன்னூறுநித்தங்கொடுத்துவந்த ... *
முத்திரைப்பண்டாரமோமோடிவைத்து-மெத்தக் (௮௱௰௬)

கறுப்பானன்மாலைகட்டிக்கன்னியப்பன்முற்றும் ... *
வெறுப்பானென்மெய்க்காவல்வேலன்-சிறிக்கிமேல் (௮௱௰௭)

ஆசைவைத்தவாத்தியாரையர்முறைதப்பிதமாய்... ... *
பாஷைவைத்துப்போனார்பகையானார்-காசுபணம் (௮௱௰௮)

மாரியெனச்சொரிந்தமாரியப்பன்சண்டையிட்டு ... *
வீரிவளவிற்போனான்மீள்வானோ-தேரேறப்... (௮௪௯)
பொன்னுடைமைபூட்டிவிட்டபொன்னப்பனந்திசந்தி .. *
சன்னையிட்டுப்பார்த்தான்சலித்துவிட்டான்- பின்னை (௮௫௰)
வரத்துமில்லைத்தானும்வழங்கானோர்சேலை .. ... *
தரச்சொன்னானின்றைக்குச்சண்டைக்-கொருப்பட்டான்.
வைதானென்னையுமயிர்பிடித்தான்செய்யாது ... .. *
செய்தான்மகளைச்செவியிலே-கையால்... ... (௮௫௨)
அடித்தான்விலக்குமவனைமுழங்கையால் ... *
இடித்தான்கரத்தினாலென்னை-இடுப்பொடியப் ...(௮௫௩)
போட்டானங்கேமூர்ச்சைபோனேனெழுந்திருந்தேன் .. *
கேட்டார்சிரிக்கவல்லோகீர்த்திவைத்தான்-ரூட்டிசெய்த ...*
தேதென்றுநீர்கேட்டாலென்னசொல்வான்தாய்க்கிழவி... *
சூதென்பான்வாரிச்சொரிந்தபொருட்-சேதம்... ...(௮௫௫)
கணக்குண்டோவென்பான்களரிமெச்சவிந்தத் ... ...*
துணிக்குண்ணியோகொடுப்பான்சொர்ணம்-பணக்கவளம்.
மாந்தரிட்டுச்சட்டிவளர்த்தகடாக்கையிலே ... .. *
பாய்ந்தக[illegible]மெய்யாய்ப்பலித்ததே-ஈந்ததில்லை ... (௮௫௭)
தாயுமகளுமொருதாமரையினீரானோம் ... ... *
பேயுமிரங்குமேபெண்ணென்றால்- தூயவரோ ... (௮௫௮)
கண்டநடுப்பேசிக்கணக்குப்பார்த்துப்பொருளைத் ... ...*
தெண்டித்துவாங்கியிந்தச்சேடனை நீர்-கண்டிப்பா...(௮௫௯)
மெட்டுக்கடக்கவெருட்டுமென்றாலென்ற ... ... *
சட்டித்தலைப்பேயைத்தானமர்த்திப்-பட்டன்மார் ... (௮௬௰)
நில்லென்றாருன்வாழ்க்கைநிர்ப்பாக்கியா நீயும் ... ... *
சொல்லென்றார்சொல்லத்தொடங்கினேன்- கல்லும் (௮௬௧)

[தன்னறிவிப்புக்கூறல்.]

கரையுமேமாபமார்க்கள்ளிசொன்னவார்த்தைக் ... ... *
குரையுமெதிர்வாக்குமுண்டோ-ஒருநாள் ... ...(௮௬௨)
நடந்தகதைகேளீர்நடுக்காட்டுநீலி... ... ... *
தொடர்ந்தாளோர்செட்டிதன்னைச்சூதாய்-நடந்தவன்கைப் ... *

பத்திரத்தாற்றப்பிப்பழைய நாரம்பலத்தில் ... ... *
டொப்த்திருந்தவேளாளர்முன் சென்றாள் - சத்துருப்போல்
ஆலங்காட்டுப்பேயதோவருகுதென்மனையாள் ... ... ... *
கோலங்காட்டிப்பகட்டிக்கொண்டென்றாள்-நீலியென்னும்.
கள்ளிமுலைப்பாலுங்கண்ணீருங்கால்கழுவக் ... ... *
கள்ளியொன்றைப்பிள்ளையாக்கையேந்தி - மெள்ளவந்து *
நாட்டிலேகண்டதுண்டோ நல்லோரேயென்னை நடுக் ... *
காட்டிலேவிட்டார்கணவனார்-மீட்டுமவர் ... .. (௮௬௮)
கிட்டவந்தார் நான்பயந்து கெஞ்சிவந்தேன்வாளுருவி ... ... *
வெட்டவந்தார்முன்னாள்விதிப்படியோ-முட்டமுட்டப் *
பேயென்றுவொன்னையிந்தப்பிள்ளைகள்ளிக்கொம்பென்றார் *
தாயென்றாரில்லைதமரில்லை-தூயவரோ ... ... (௮௬௯)
பேர்விட்ட்பான்முலைக்கீழ்ப்பிள்ளையைவிட்டாலதுதான் ... *
ஆர்கிட்டப்போமென்றறியலாம்-பாருமென ... (௮௭௦)
விட்டாள்சபையிலது மெள்ளத்தவிழ்ந்துமடி ... ... *
தொட்டேறச்செட்டிதனுக்கென்றான்-ஒட்டாரம் (௮௭௧)
பண்ணுகிறான்செட்டியென்றார்பார்த்தவரொல்லாமவளென் *
கண்ணானே நீலியென்றான்காணடுங்கிப்-பெண்ணலது (௮௭௨)
சத்துருப்பேயாகிச்சதிசெய்தால்நாங்களுனைக் ... ... *
கித்தனைப்பேரும்பழிகாணென்றுரைத்துப்-பத்திரத்தை ... *
வாங்கிவணிகனையுமார்க்கமிட்டநீலியையும் ... ... *
பாங்கிலொருவீட்டிற்படுக்கவைத்துத்- தாங்குமெனப் (௮௭௪)
பூட்டிக்கதவடைத்துப்போயினார்பேய்மதியோர் ... .. *
வாட்டமுற்றநீலிபழிவாச்சுதென்றே-ஊட்டி ..... (௮௭௫)
பிடித்தாள்வணிகன்பிடரிதனைக்கையால் ... ... *
ஒடித்தாள்கடித்தாளுதிரம்-குடித்தாள்பின் ... (௮௭௬)
நீண்டாள்பிளந்தெறிந்தாள்நெஞ்சிற்குடர்மாலை ... ... *
பூண்டாளெழுந்தாள்பொருள்வணிகன்-மாண்டதற்பின் ... *
கண்டார்வழக்கையெந்தக்கற்பனையாற்சற்பனைகள் ... ... *
விண்டாலும்பெண்வார்த்தைமெய்யாங்காண்-அண்டினர்க்கு *

றுக்கினடுக்காட்டிலடித்துப்பறித்தூரிற்... ... .. *
கூக்குரலுமிட்டாற்பின் கூறுவதென்-வாய்க்கலிலம் (௮௭௯)
பூண்டபரியெடுத்துப்போட்டதுமல்லாதுகுழி ... ...*
தோண்டுதென்றானினிமேற்சொல்வானேன்-ஆண்டமனை.
அந்தணனோநானிவண்மேலாசைகொண்டேன்போசமதாய் .. *
இந்தவிதிவருமென்றெண்ணாமல்-முந்தமுந்தக்..... (௮௮௧)
கூனிமருந்தையிட்டுக்கூறுகொண்டாளன்றுமுதல்... ...*
மேனியொடுங்கினேன்மெய்ம்மறந்தேன்-நானிவட்கு (௮௮௨)
முன்னாட்கடனைமுதலிடுவார்போற்கொடுத்த... ... .. *
பொன்னேபொற்பூத்துகிலோபூஷணமோ-சொன்னசொல்.
லத்தனைக்கும்வீணையழித்ததெல்லாம்யான்கணக்கிட் ... *
டெத்தனையென்றுங்கட்டியம்புவேன்-நித்தநித்தம்... (௮௮௪)
வல்லார்தனத்திசொந்தவைப்பென்றுயேனையும் .. ...*
அல்லாமற்போக்குவரத்தாயிரம்பேர் நல்லவள்போல் (௮௮௫)
உள்ளதெல்லாமெள்ளவுபாயமாவாங்கியெனைத்... ... *
தள்ளிவிடக்கள்ளிதளமெடுத்தாள்-உள்ளுடையப்... (௮௮௬)
பேசினாள்சும்மாப்புறப்பட்டுப்போடாவென்... ... .. *
றேசினாள்நீகொடுத்ததென்னென்றாள்-கூசாமல் ... (௮௮௭)
முந்திமடிபிடித்தாள்முந்தானையைக்கிழித்தாள்... ... *
சந்தியிலேபூணூல்தனையறுத்தாள்-இந்தநாத்..... (௮௮௮)
தாட்டானைவந்தென்தலையிலொருகுட்டு ... ... ... *
போட்டாளென்குட்டெல்லாம்பாச்சையா-மோட்டு (௮௮௯)
வடுகனையென்மேல்விடுத்தாள்மற்றொருவனானாள் ... ...*
விடுவானோபுண்ணியவான்விட்டான்-இடுதூறாய் ... (௮௯௰)
அந்தக்கிழவியலக்கழிக்கப்பார்த்திருந்த... ... ... ..*
இந்தக்குமரியேனென்றாளோ-சந்த்ர ... ... ... (௮௯௧)
கலைவாணுதலணங்கேகாதலென்மேலுண்டோ... .. *
இலையோவுனக்கென்றேனெட்டித்-தலைமேற் ... (௮௯௨)
சளக்கென்றடித்தாள்சதிகாரிவிட்டு ... ... ... ...*
விளக்கிலடித்தாள்பின்வெள்ளி-மூளைக்குமுன்னே...(௮௯௩)

முந்திபோட்டின்மேமேல்முக்காலுமாசையென்று ... ...*
சந்திவீரப்பன்முன்னேதாண்டினாள்-வந்தொருவன் (௮௯௪)
மூத்தங்கொளுவாய்க்குமுன்னொருவன்தான்கொடுத்த ... *
அத்தம்பலங்கொடுப்பார்க்காணவுண்டோ-வித்தகரோ (௮௯௫)
மேனிபிட்டுநல்லமெழுகுபிள்ளையார்போலே... ... ...*
யானிருந்தநீர்க்கமறியீரோ-கூனியெனக்... ... (௮௯௬)
இட்டமருந்தாலுமிவள்கொடுத்தபுண்ணாலும் .. ... ... *
ஒட்டியுலர்ந்தவுடலானேன்-மட்டைக் .. ... ... (௮௯௭)
கிறுத்ததெல்லாம்போகட்டுமென்பொருளீதென்று .. ...*
மறித்துமொருபொன்முடிப்புவைத்தேன்-திறத்தமுழு.
மாணிக்கமொன்றுமணிமுத்தொருசிறங்கை ... [வைத்
பேணிவைக்கச்சொல்லிவைத்தேபண்ணிடத்தில்- ஏணியை
தேறவிட்டுவாங்கியென்னயிக்கோலங்கண்டசுழன் ... *
மாறிகிட்டவாங்கிவழங்குவீர்-வேறெனக்குத் ... (௯௱)
[பின்னும்தாய்க்கிழவி அறிவிப்புக்கூறல்.]
தஞ்சமில்லைநீங்களேதஞ்சமென்றேனந்நேரம் ... *
தொஞ்சமுலைக்காரி திடி துடிப்பாய்-வஞ்சத் ... (௯௱௧)
திருடனிவன்கூத்திச்செலவுக்கும்போக்கி ... ...*
ஒருமுடிப்புவைத்ததுவுமுண்டோ-மருதங் .. ... (௯௱௨)
குடியிருக்குதேயழகர்கோயில்பதினெட்டாம் ... *
படியிருக்குதேமுதலைப்பள்ளம்-நடுநியாயம் ... (௯௱௩)
சொல்லுமேசிங்கம்பிடாரி துடியாமல் ... ... *
கொல்லுமேதீர்த்துக்கொடுக்கிறோம்-அல்லவென்றால் (௯௱௪)
என்னைக்கிடத்தியென துமகள்தாண்டமகள் ... ...*
தன்னைக்கிடத்திநான் தாண்டுகிறேன்-சொன்னதென்ன.
தெள்ளிமையோமுற்பிறப்பிற்சீர்கேடனென்மகட்குப் ...*
பிள்ளையோவென்றாள்பெரியோர்முன்-கள்ளிசொல்லைக்.
[சபையார்விசாரணைகூறல்.]
கேட்டுநகைபுரிந்தார்கிட்டவழைத்தென்னைப்பவர் .. ..*
கூட்டத்துக்குள்ளிருத்திக்கூறுவார்-வாட்டமுற்ற ... (௯௱௭)
மாகவரேவேசிமருந்திட்டாளென்றீரச்
சேதியுமக்கெங்கேதெரிந்ததென்றார்-காதல்தந்த... (௯௱௮)

[மருந்திட்டசதிந்தனைகூறல்.]

மூத்தனையாள்நேற்றிரவுமூலைக்குள்வைத்துநின்ற ... *
சூத்திரயரக்குடித்துக்கூட்டமிட்டிவ்-வத்தனைமுதல் (௩௱௯)
வெள்ளாட்டிகளுங்குடித்துவெறிபிடித்துத் ... *
துள்ளாட்டமாடமங்கைதூஷணித்துத்-தள்ளித் (௩௱௰)
தலைக்கடையில்விட்டாளென்தன்னையொருத்தன் ... ... ௨
விலக்கியெருதுபோற்புகுந்தான்வீட்டில்-மலக்கமாய்த்(௩௱௰௧
திண்ணைத்தலையிற்படுத்திருந்தேன்முண்டிணிவாய் ... ௨
கண்ணியங்கேவந்தாள்கலைநெகிழ்த்து-உண்ணும் ..(௩௱௰௨)
அரக்குவெறியாலவளென்மேலவீழ்ந்து ... ... *
குரங்குவெறிபோற்குறிவிற்குய்யம்-பொருந்தியெனைப்.
பண்ணாதகோலமெல்லாம்பண்ணினளார்க்குமொரு ... *
பெண்ணாசையாலுற்பிடிக்குமே- அண்ணர்களைச (௩௱௰௪)
சம்போகஞ்செய்வதுபோற்றன்னாலேயாவதெல்லாம்... ...*
அம்பாகுங்கண்ணிபார்த்தாகாமல்- வெம்பியே ... (௩௱௰௫)
காட்டுமருந்துங்கடைமருந்துமென்மருந்துங் ... ... *
கூட்டியிட்டாலாசையொருகோதைமேல்-நாட்டம்வர-
வொட்டுமோவென்றுநடந்தையாகத்திரிந்த ... ... *
வட்டமுலையாள்சொலவகைவகையாற்-சிட்டரே...(௩௱௰௭)
இந்தவிதம்நானறிந்தேனென்றுரைத்தேன்கேட்டுநல்ல ... *
விந்தையெனச்சிரித்தார்மேலோர்கள்- சிந்தைநொந்த ... *

[சபையார்தன்னைத்தேற்றினமைகூறல்.]

பூசாரோவேதபுனிசெரியம்பலத்தில் ... ... *
ஆசியுடனேரத்தகாதுகாண்-வேசியொரு ... (௩௱௰௯)
செய்யமறைவேதியனைச்சென்னியிற்கல்லிட்டகதை ... *
ஐயரேநீர்தாமறியீரோ-கையில் ... ... (௩௱௨௰)
திரவியத்தைவாங்கியுடைச்சிவனுடன்விட்ட... ... *
மரியாதைக்குண்டோவழக்குப்-பெரியோரே ... (௩௨௧)
வேதியராயுள்ளவர்கள்வேசியரைக்கண்டாக்கா ... ...*
காதவழிவிலங்கல்காரியங்காண்-ஓதுமறை .. ... (௩௨௨)

மந்திர நூல்வாயான்மதுவாய்ரசங்கொள்ள ... ... *
எந்தவகைதுணிவாயெண்ணினீர்-சிந்தைமயல் ... (௯௨௩)
தீர்த்தவாசிக்குத்திரவியமெல்லாங்கொடுத்து... ... *
தீர்த்தவாசிக்கடனைதீர்த்துவிட்டீர்-கீர்த்தியா ... (௯௨௪)
நாமறியாக்கூத்துநடித்துவிட்டீருமளவோ ... *
மாமறைபோர்க்கெல்லாம்வசையாச்சே-சேமநிதி ... (௯௨௫)
தன்னைப்பறித்தாள்தரச்சொல்லுமென்றீரப் ... ... *
பொன்னையினிகேட்கப்போகுமோ-பொன்னைப்போர்.
கூட்டியம்சந்தேனெடுத்துக்கொண்டபேர்த்தம்லமயவர்... *
ஓட்டியவீத்தெண்டிப்பதுண்டோகாண்-சூட்டரவின் (௯௨௭)
வாய்க்குளகப்பட்டமண்டூகமும்யானை ... ... *
வாய்க்குளகப்பட்டவான்கரும்பும்-தீக்குள்ளே ... (௯௨௮)
விட்டநறுநெய்யும்வெயின்முகத்திலேவெடிக்க ... *
பட்டகமரில்விட்டபாற்குழம்பும்-கட்டுபுகழ் ... (௯௨௯)
பாங்கினற்றேடாப்பரமலுத்தர்கைப்பொருளும் ... *
வாங்கினலிப்பொருளும்வாங்கலாம்-நாங்கள் சொன்ன (௯௩௰)
புத்திவழிநின்றூற்பொருளரிதோநீர்கற்ற ... *
வித்தையிலேசெம்பொன்விளையுமே-எத்தும் ... (௯௩௧)
பரத்தையநுக்கிரகத்திலும்பத்தத்தனையாய் ... ... *
வரத்தக்கயோகம்வருங்காண்-கருத்திலே ... (௯௩௨)
எண்ணியிடையாதிருக்குழூர்க்கேகுமென்று ... ... *
புண்ணியர்தாந்தன்மனையிற்போயினர்-பெண்ணணங்கை.

[தான்கலங்கித்தெளிந்தமைகூறல்.]

பின்னடத்திச்செல்லினவள்பின்னழகைப்பாராரே ... ... *
முன்னடத்திச்சென்றுள்முழுப்பாவி-நன்னீர்கட் ... (௯௩௪)
டாகுங்குளத்திலனுபவித்துவற்றியபின் ... ... *
ஏகும்பறவைகள்போலேகினாள்-மோகமுற்ற ... (௯௩௫)
என்னைக்கிழவியிடர்செய்தனைப்பிரியாக் ... ... *
கன்னிதனைப்பிரிவுகண்டாளே-இந்நாட்டில் ... (௯௩௬)

மாட்டுமெறித்தாய்க்கிழவிமாமிதலையிற்கல்லைப் ... ... ... *
போட்டுப்புறப்பட்டுப்போவோமோ-நாட்டமுற்ற ...(௱௩௭)
ஊரெங்கேதோழரெங்கேயுற்றாரெங்கேமனைவி ... ... *
யாரெங்கேயஷ்டாவதானியெனும்-பேரெங்கே ...(௱௩௮)
நானாவிதமுமெண்ணிநட்டாற்றுக்கோரையைப்போல் ... *
ஆனேமெனக்கலக்கமாகினேன்-யானே ... ... (௱௩௯)

[ஆலயஞ்சென்று தெரிசித்தமைகூறல்.]

எனைத்தேற்றிக்கொண்டுபோயெங்கள்சொக்கலிங்கந் ... *
தனைப்போற்றியென்கவலைசாற்றி-அனுக்கிரகம் ... (௱௪௰)
பெற்றிரண்டாஞ்செம்பொற்பிரகாரம்யான்வலமாச் ... *
சுற்றிவயிரவசுவாமியையும் முற்றும் ... ... ... (௱௪௧)
வணங்கியப்பொற்கம்பந்தனக்குவடபால் ... ... ... *
இணங்குந்திருவாசற்கிப்பால்-மணங்கமழ்பூ ... ...(௱௪௨)
மாலைநிறைத்தமணிவாசன்முன்முகப்பிற் ... ... ... *
சேலைநிறைத்ததிருவிளக்கும்-பாலரவி ... ... ...(௱௪௩)
சாந்திரநினைத்துக்கட்டளைக்குக்கட்டளையாய் ... ... *
வாய்ந்ததெல்லாஞ்சொர்ணமயமாகித்-தேய்ந்தமுனே (௱௪௪)
நெட்டிலைவேற்சங்கநிதிக்கரசனாபரணப் ... ... ... *
பெட்டிதிறந்தபிரகாசம்போற்-சட்டப் ... ... (௱௪௫)
புழுகுமணக்கப்பொலிந்தவரைக்கண்டு ... ... ... *
தொழுதேனதிசயமுந்தோன்றப்-பழுதில் ... ...(௱௪௬)
மறையோன்மணியம்வரதையனென்போனவ் ... ... *
வறைவாசலிருந்தானையா-நெறிவுடையாய் ... ... (௱௪௭)

[நாகமகூளேந்திரன் கட்டளைகண்டமைகூறல்.]

ஆருபயமீதென்றேனுடலபயன்ஞாலலைத் ... ... ... *
தாருலவுமேருத்தடம்புயமால்-பாராளும் ... ...(௱௪௮)
யோகமகராசனென்பதூர்வாழ்பெரிய ... ... ... *
நாகமகூளேந்த்ரநரபாலன்-தோகைமயில் ... ... (௱௪௯)
மீனாக்ஷியம்மைக்குமிக்கசொக்கலிங்கருக்கும் ... ... ... *
தானாக்ஷியானவுபசாரமா-மேன்மையபி ... ... (௱௫௰)

வேஷகமதுமாலைசிறப்பமுதுதிபருத... ... ... ...*
லாகநடட்பிக்குமறையென்ருன்-மோகநமக் ... ...(௯௫௧)

[இழந்தபொருளுக் கிரங்கினமைகூறல்.]

இட்டணையுங்கன்னிக்கிறைத்ததெல்லாமிப்படியோர்... .. *
கட்டளையாச்செய்துபலன்கண்டோமோ-சிட்டர்தொழும்.
அங்கயற்கணம்மைக்கழகுதிருவாட்சியென்று... .. ...*
தங்கத்திலேசமைத்தோமோ-சங்கரர்சொக் ... (௯௫௩)
கையர்மகிழ்ந்தேறவபிஷேகபண்டாரம்... ... ... *
செய்ததிருத்தேர்போல்ச்செய்தோமோ-வைபோகப்(௯௫௪)
பெற்றபதுமண்டபத்திற்பின்புறமுமுன்புறமும் .. *
பொற்றகடுகொண்டழுத்திப்போட்டோமோ-மற்றுமெங்கள்
மாலழகருக்குவயிரத்தான்மின்னெறித்தாற்... ... ...*
போலழகாமங்கியணிப்பூட்டினமோ-சாலையறம் (௯௫௬)
செய்தோமோகோதானஞ்செய்தோமோபூதானம்... ...*
செய்தோமோசத்திரங்கள்செய்தோமோ-துய்யநிதி (௯௫௭)
ஆரிடத்தில்வாங்கியரும்பலனைத்தேடுவோம்... ... ...*
பேர்படைத்தபெஞ்சைசப்ரதாயனென்ப-தூர்படைத்த.

[அப்பிரயுவிடத்துக்குச் செல்லத்துணிந்தமைகூறல்.]

ஐயன்பெரியநரசையினிடஞ்செல்வோமோ... ... ...*
செய்யுமறைவேதியரோசெப்புமென்றேன்-எய்துதிருப்.
பாற்கடலுக்கேகினவர்பால்குடியரோவிதற்கு ... ... *
மேற்புத்தியுங்கேட்கவேணுமோ-சூற்கொண்டு .. (௯௬௦)
பெய்யுமழைக்குணையாதபேருமவன் ... ... ...*
கையிலேலற்காதவருங்காணேனன்-ஐயமின்றிப் ... (௯௬௧)
போமெனவெண்ணீறுதந்துபூசிவிட்டார்சந்தனத்தை .. *
யாமெனச்சொக்கேசரடிபணிந்து-மாமேவு .. .. (௯௬௨)
கூடலழகர்மதனகோபாலர்பூந்துளவ ... ... ... .. *
வேடலிருந்தார்வீரராகவமால-மாடேறும்... ... (௯௬௩)
நல்லாண்டவர்பார்க்குமிம்மையிலேதம்மைதரு... ... *
மல்லாண்டவர்பாதம்வாழ்த்தியே-செல்வ... ... (௯௬௪)
மடந்தையங்கயற்கண்வாசலரச்சாலை... ... ... ... *
கடந்துமறுவீதிகடந்து-நடந்துவரப்... ... ...(௯௬௫)

[மதுரையினின்றுஞ் சென்றமைகூறல்.]

பின்னிழுக்குமோர்காலே பெண்ணாசைமாமிசினம் ... ...*
முன்னிழுக்குமோர்காலுமென்றுதரம்-பின்னே ... (௧௬௬)
திரும்புவதுமீள்வதுமாய்ச்சீமாட்டிபாசைக் ... ... ...§
கரும்பைநினைத்தேன்கருத்தில்-விரும்புமவள் ... (௧௬௭)
குன்றிருக்குமென்முலைமேற்கூடிக்கலந்தசுகம் ... ... *
இன்றொருத்தன்பங்காயிருக்குமோ-மன்றலார்ந்தார்ச (௧௬௮)
சுற்றுடநான்படுத்ததூங்குமஞ்சமீதிலொரு ... ... ...§
பற்றுப்பயலும்படுப்பானோ-மற்றுமந்தச ... ... (௧௬௯)
சந்தியிலேபாயிட்டசண்டையிலேவந்தவொரு ... ...*
தொத்திவடுகன்சுகிப்பானோ-முந்திவிளை ... ... (௧௭௰)
யாடியனுராகம்பாடியுறவாடிநான் ... ... ... *
கூடியதெல்லாநினைத்துக்கொள்வாளோ- மேடையின்மேற்.
இன்னமுலைமேற்பதித்தகிள்ளைப்பார்த்தென்னையுஞ்சற் ...*
றெண்ணிநெடுமூச்செறிவாளோ-எண்ணிற் ... ...(௧௭௨)
படாதபடித்தனையும்பட்டேனென்பாவம் ... ... ...§
இடாதோபிரமனார்க்கென்றே-கடாமல் ... ... (௧௭௩)
வடக்குமுகக்கோட்டைவாசல்நடுக்கட்டு .. ... ...*
முடக்கில்வரும்போதெனக்குமுன்னே-அடக்கமுள்ள(௧௭௪)

[ஞானியாரைமறுபடியுங்கண்டமைகூறல்.]

மாதவபரஞானியையன்மதுரைக்கண் ... ... *
றேகிவந்தானென்னெதிராக-நானவனைக் ... (௧௭௫)
காணுமளவிற்களவாண்டவன்போலெண் ... ... *
சாணுடம்புங்குன்றியொருசாணானேன்-நாணமாய்...(௧௭௬)
மாமிதனைக்கண்டமருமகள்போலானேனைச் ... ... *
சாமியெனையன்பாய்த்தழுவினான்-நாமறிய... ... (௧௭௭)
ஆனைபோலேயிருந்தீரையோயுமுடம்பு ... ... *
பூனைபோலேயொடுங்கிப்போவானேன் ஆனவிது...(௧௭௮)
என்னவகையென்றான்மற்றேதுவகைநீர்முதலே .. .. *
சொன்னவகைகேளாதகோஷவகை-முன்னுமது ... (௧௭௯)
கையைவிட்டுவேசிமகள்கால்பிடிக்கச்சென்றேனான் ... ...*
மையையிட்டகண்ணிக்குமாலானேன்-பையவுண்டைச் ௧௮௰

கூட்டியிட்டாள்கைப்பொருளைக்கொள்ளையிட்டாள்கைக்குர
ஆட்டியிட்டாளிக்கோறமாக்கியிட்டாள்-கேட்டார் [ங்கா

[ஞானியார்தேற்றினமைகூறல்.]

நகைப்பாரொன்றேனிதற்குநாணமேன்யார்க்கும் ... ... *
வகைதப்பாமோசம்வராதே-பகுத்தறிவாம்... .. (௧௮௨)
வண்டாடுஞ்செங்காந்தள்வாடையாலேவசைந்து ... ... *
கொண்டாடும்வார்கைக்குலைங்காட்டக்-கண்டெதிர்புன். ௧௮௩
இந்திரன்மெய்யோனிக்கணீனாஞ்ஞூறானதுவும் ... ...*
அந்தணனார்சென்னியிலொன்றற்றதுவும்-சுந்தோப (௧௮௪)
சுந்தாமடிந்ததுவுஞ்சுக்ரீவனாலேவாலி ... ... ... *
மூந்தமடிந்ததுவுமுன்னொருநாள்-கந்தன் ... ... (௧௮௫)
மரமானதுமிலங்கைவாழ்வேந்தன்சிந்து ... ... *
இரமானதும்வச்ரதேகத்-தூரம்படைத்த... ... (௧௮௬)
கீசகனார்மாண்டதுவுங்கேட்டிலையோபெண் ... .. *
ஆசையாலென்பதறியீரோ-பூசுரரோ ... (௧௮௭)
கைப்பொருள்போச்சென்றுகவலையேன்கல்வியொன்றல *
மெய்ப்பொருளாம்பாவலர்க்குவேளாண்மை-இப்புவியில் *
மன்னனுஞ்பாசறக்கற்றோனுஞ்சீர்தூக்கின் ... ... *
மன்னனிற்கற்றோன்சிறப்புடையன்-மன்னனுக்குத் (௧௮௮)
தன்றேசமல்லாற்சிறப்பில்லைகற்றோர்க்குச்... ... *
சென்றவிடமெல்லாஞ்சிறப்பென்று-நன்றிபெற ... (௧௯௰)
அவ்வைசொன்னநீதியறியீரோநீரினிமேல் ... ... *
இவ்விடம்விட்டுங்களூர்க்கேகுமென்று-தெய்வ ... (௧௯௧)
மறைவல்லோனென்னைவழிவிடுத்துப்பார்த்துக் ... ... *
தறுகின்றானென்மேற்றபவால்-நெறியுடனே ... (௧௯௨)

[ஒன்பதூர்நோக்கிச் சென்றமைகூறல்.]

ஐம்பதூர்க்கேகியலைந்தபலனேதென்றே... ... *
ஒன்பதூர்க்கேகவொருமித்தேன்-முன்புகருங் ... (௧௯௩)

[நற்சகுனங்கண்டமைகூறல்.]

காகமிடத்திருந்தகைக்குவலப்புறத்தில்... ... *
ஏகக்கருடனிடமாக-யோகபலம் ... ... (௧௯௪)

[ஏடகங்கண்டமைகூறல்.]

இன்றுவந்தனாகுநமக்கென்றுவந்தேனேடகத்திற் ... *
சென்றுவந்[illegible]யந்தச்சிவனுணை-அன்றுதெரி .. (௯௰௫)
நாகமலருந்தறுங்கொன்றைப்பூவிதழுந் ... ... *
த்யாகமனைப்பொன்னுமுத்துஞ்சிந்திநிற்பத்-தோகைவிரிச்
சித்தேனென்பூர்வசெனனதோஷங்கடெலாம் ... *
இத்தேசங்கண்டதெனவறியேன்-அத்தலத்தில் ... (௯௰௭)
வேம்புகரும்பாமாம்வெண்டணலோநீருமாம் ... *
தாம்புவிடுநீரமிர்தத்தானுமாம்-தேம்பும் ..... (௯௰௮)
வறியேன்மருந்தின்மைபக்கழுமேநோயுந்தீர்த் ... *
தறிவாளனுக்கிவிட்டதவ்வூர்-நெறியுடனே ... (௯௰௯)
அற்றைநாள்சங்கியருணோதயத்தெழுந்து ... ... *
மற்றைநாண்மேற்குவருகொண்டேன்-வெற்றிபுரி ... (௱)
கோடிகொண்டமால்யானைக்கூளேந்த்ரனென்பதூர் ... *
நாடிகண்டேனென்கவலைதான்காணேன்-ஆடகவான் ... (௱௧)

[பின்புநாட்டுவளங்கண்டமைகூறல்.]

எட்டியபூஞ்சோலையெழிற்கமுகும்வாழைகளும் ... *
கிட்டியபூங்காவனமாங்காண்பிக்க-விட்ட ... (௱௨)
வருக்கைபலாக்கனியைமந்தியிருகைக்கொண் ... *
டிருக்குமதுமத்தளக்கொட்டென்ன-உருக்குமிசை (௱௩)
யண்டிதிசதிகூடவரிக்குயில்கள்பண்பாடக் ... *
கண்டுகிளிகள்கவிபாடத்-தண்டாத ... ... (௱௪)
மன்றலந்தாரல்விமலர்வாடைக்காற்றலைப்பட் ... ... *
டொன்றொடொன்றுதாளம்போலொத்திசைப்ப-நின்றலகில்
நீலவன்னத்தோகைநெடுஞ்சிறகைமேல்விரித்துக் ... *
கோலவநிமையர்போற்கூத்தாடச்-சோலைக்குள் ... (௱௬)
ஆங்குநதிபாயுமலரோடைவாளைவாள் ... ... *
வாங்கியவீச்சுவளங்காட்டப்-பூங்காவில் .. ... (௱௭)
வந்துநுழைந்துசெல்லும்வாலரவிகூத்துக்குப் ... *
பந்தம்பிடிக்கும்படிசிறப்பு-மூத்த ... ... (௱௮)

முகைத்திருக்குமுல்லைமலர்மொய்த்திருந்துபார்ப்போர் ... *
நகைத்திருக்கும்பாவனையாய்நண்ணு-மிகுத்தபொறி ... (௱௯)
சாடுகின்றமஞ்ஞையெதிரன்னம்பறந்துவந்து ... ... *
போகின்றவண்டுசுபோற்பாடிய-நீடுலயத் ... (௱௰)
சாலிக்கதிர்குலையுந்தாமரையுமந்தநறுஞ் ... ... *
சோலைக்குண்டன்னர்குழாஞ்சூழ்ந்தமைதாக்குஞ்-சோலைகளம்.
ஏதென்றுசொல்வேனிருதோளும்பூரித்தேன் ... *
வேதன்றொழுங்கோயின்மேட்டிமேல்-சீலையுடன் (௱௰௨)
[சிம்மராயனைக்கண்டு தெரிசித்தமைகூறல்.]
மாதவனைக்கண்டேனென்வல்வினையெல்லாமுடிந்தேன் ... *
ஆதவனைக்கண்டபனியாக்கினேன்-பாதம் ... (௱௰௩)
தொழுதுசிம்மராயரைத்துதித்துனைப்பாடாமல் ... *
பழுதில்லைவேசையனாய்ப்பன்னி-முழுவதுமுன் ... (௱௰௪)
மீனவடிவெய்தபின்னர்கமடமென்றுநீ ... .. *
பானசிங்கரூபமிடையாமென்றும்-மேன்மையுடன் (௱௰௫)
மைக்கிசைந்தரூபத்தைமங்கையர்கூந்தலென்றும் ... *
கைக்கிசைந்தசங்கைக்கழுத்தென்றும்-திக்கனைத்தும் (௱௰௬)
தந்திப்புவனமெலாந்தந்தவனைத்தந்தமல ... ... *
ருந்திதிருமுகத்துக்கொப்பென்றும்-சந்ததமும் ... (௱௰௭)
வேயடுக்கநின்னிசையைமின்னார்வசனமென்று ... *
நீபடிக்கும்பாவைநிசம்பமென்றும்-வாய்பிதற்றிப் (௱௰௮)
பாடினேனிற்கப்பலன்கண்டேன்சிந்தைமலர் ... *
சூடினேன்பாதந்தொழுதெழுந்தேன்-ஆடி ... (௱௰௯)
[பதியின்சிறப்புக் கண்டமைகூறல்.]
அளகாபுரிக்குமமராபதிக்கும் ... ... *
வளமானவபுரிக்குவந்தேன்-பளபளெனும் ... (௱௨௰)
செம்பொன்மதிலுந்தேரோடும்வீதிகளும் ... . *
உம்பருழைநீளத்தகோபுரமும்-அம்பரத்தில் ... (௱௨௰௧)
ஆற்றுநீரள்ளியருக்கனுடல்குளிரத் ... ... *
தூற்றியபொன்மாடத்துகிற்கொடியும்-நீற்றொளிசேர் ௱௨௨

தன்னிறத்தைப்பொன்னிலத்துத்தந்திக்கிற்கந்திலத்துப் ... *
பொன்னிறத்தைப்பெற்றபுரிசைகளும்-இவ்வழி... (௩௨௩)
கத்தனையுங்கண்டுமகிழ்ந்தையன்கோயிலனும்... ...*
கர்த்தனையுங்கண்டுகமலத்தால்-பத்தியுடன்... ... (௩௨௪)

[அரண்மனைகண்டுசென்றமைகூறல்.]

சேவித்தேன்கோயிலுக்குத்தென்புறத்திற்கற்பகப்பூ ... *
நீவிதனேனூற்றுநெடுமதிலும்-மேவுமுகம் ... (௩௨௫)
இட்டமணிப்பொற்குடங்களெட்டுவகைச்செந்திருவில் ...*
வட்டமுலைபோவிலங்குமாளிகையும்-தொட்டுக்... ...(௩௨௬)
குழைக்கின்றநலகுரவுகொண்டேனைவாவென்... ... ...*
றழைக்கின்றதுபோனின்றாட்டம்-தழைக்கின்ற ... (௩௨௭)
சிங்காரவெள்ளைச்செயடாலுங்கண்டிதுவே ... ... ..*
எங்கோனரண்மனையென்றெய்தினேன்-துங்கப்... (௩௨௮)
படையாற்றிருடர்பயத்தாற்கொடையால்... ... ... *
அடையாதவாசலுக்குள்ளானேன்-தடவிகெட... ... (௩௨௯)
காந்துதழற்சிறுகட்காசானைநிற்பவது... ... ... ...*
ஏந்துகொம்பைக்கண்டேமெலென்றுமனம்-சோர்ந்துநாம்.
வெல்லவிட்டபூண்முலையாண்மென்முலைமேலென்மனதைச்*
செல்லவிட்டேன்மெள்ளத்திருப்பினேன்-செல்வமுதல். ௩௩௧
வாசலுக்குள்மன்னர்வருவாரும்போவாரும்... ... ...*
சேமிசமெனுஞ்சந்தடிக்குட்சிக்கினேன்-வீசுகின்ற...(௩௩௨)
பட்டைக்கம்புக்குப்பயந்தெனைப்பின்பற்றிவந்த .. ... *
பொட்டைக்கலியன்றூடுக்குண்டான்-இட்டப்போய்...(௩௩௩)
அத்திமேனன்கொல்லவினையாமென்றூரப்பாநான்.... ...[ஸரிப்
வித்துவானென்றுசொன்னேன்விட்டுவிட்டார் - பொய்த்தவ

[கொலுச்சிறப்புங்கண்டமைகூறல்.]

பத்திவிலாசப்பவளக்காற்போதிகைப்பூ... ... ... *
வைத்தகனகமணிமண்டபத்தில்-இச்திகரி... ... (௩௩௫)
வாள்லோகம்புரக்குமால்பெரியநாகேந்த்ர ... ... ...*
கூளபூபாலன்கொலுவாகத்-தோளிற் .. ... ... (௩௩௬)
செயமாதுகூத்தாடத்திங்கண்முகமேற்பங் ... ... ..*
கயமாதுதன்கருணைகாட்டக்-கைமேலேந்து... ... (௩௩௭)

நெய்வடித்தவாள்செவிக்குநேராசநின்றெனக்கூண்... ...*
எவ்விடத்தைநையாசொல்லெனக்கேட்பச்-செவ்வியபூஞ் (௩௩௮)
சந்திரகாவித்தலைப்பாகைமேற்கவிகை... ... ... *
சந்த்ரோதயகாந்திதான்காட்ட-அந்தரமும்... (௩௩௯)
திக்கனைத்துஞ்சுற்றச்சிறகடிக்கொள்சீர்த்தியைப்போல ... *
மிக்கிரட்டைப்பாவாடைவீசிநிற்கச்-செக்கர்... ... (௩௪௰)
அவிரொளிரத்நாங்கிபடுத்திருபால்வீசும்... ... ... *
கவரியுபயநிறங்காட்டக்-கவலைபடும் ... ... ... (௩௪௧)
சொற்காட்டுமொன்னார்தொழுதுவிழுந்துகொஞ்சப்... *
பற்காட்டுஞ்சென்னிபதித்தமணி-முற்காட்டு... ...(௩௪௨)
சாமித்துரோகரைப்போற்றண்டைமுகப்பில்வெற்றிச... *
சோமத்தலைபோலச்சோதிவிட-வீமரண.. ... (௩௪௩)
தீரதுரைமக்கள்செயமந்திரிமாரும் ... ... ... ...*
வீரதளகர்த்தர்களும்வேந்தர்களும்-பார்மதிக்கும்... (௩௪௪)
ஸ்தானபதிகளும்ப்ரசண்டநியோகிகளும்.. ... ... *
நானுகலைதெரிந்தநாவலரும்-கோன்முறைமைக்... ...(௩௪௫)
இந்தவகைக்கிந்தவகையின்பந்தருவதென்ன.. ... ...*
வந்துபரராசர்மனுக்கேட்பச்-செந்திருவாழ் ... (௩௪௬)
ஐயவதனசந்த்ரசோபைநறுந்தெள்ளமுதை... ... ...*
தையநல்லார்செங்கட்சகோரமுண்ணக்-கைகுவித்து (௩௪௭)
வாரிட்டராணுவரிசையாய்நிற்கவெதிர்... ... ... ...*
காரிட்டயானைநின்றுகாதாட்டத்-தாரிட்டுப்.. ... (௩௪௮)
பொன்னின்முகப்பூண்டுப்பூட்டிநிரைத்தடில்வி ... ...*
வன்னப்பரிகளைத்துவாவிநிற்க-எந்நேரம்... ... (௩௪௯)
கூடுஞ்சனுஊழியக்காரர்கோடிசெய்த ... ... ... ..*
தேடுங்கனசேருவைகாரர்-சோடிட்டுத்... ... ... (௩௫௰)
தத்தரமாய்க்காலிலிட்டதண்டைகளுங்கேடயமும் ... *
கத்தியுமாய்வந்துநின்றுகைகுவித்துச்-சித்தம்வரச்... (௩௫௧)
சிங்களத்தைவெட்டிச்சிறைபிடிக்கவோநாங்கள்... ... *
வங்களத்திலேகலகம்வைக்கவோ-பங்கமிலலா... ...(௩௫௨)
வல்லத்துக்கோட்டையைப்போய்வாங்கவோவாங்காத ... *
கொல்லத்தைக்கொள்ளையிட்டுக்கொள்ளவோ- மெல்லப்பா.
சொல்லையாவென்னத்துடிமடியக்காரர்பணம் ... ... *
செல்லும்வரவுஞ்செவிக்கேற்ற-நெல்லுநிதி... ... (௩௫௪)

ஆயக்கமுஞ்செலவுமாதாயமுங்கழிவும்……… … ……*
வாயிற்கணக்கர்வந்துவாசிக்கத்-தேயத்துக்… … .. (௩௫)
கோலோலைவாசகத்தைக்கூறுவார்தாமெழுதி……… ……*
ஏலோலைக்கொப்பயிடச்சொல்லத்-தாவித் .. …. …(௩௬)
தகருந்தகருந்தலையுந்தலையுந் ……… … .. …… ……*
தகருந்தகருமெனத்தாக்க-விகடநட… . ……… (௩௭)
மல்லராய்முற்பகையுமல்லராய்க்கட்டிவிழு …… … .. *
மல்லராய்க்கைகுவித்துவாங்கிநிற்ப-வெல்லக்…… . (௩௮)
குறும்புள்ளாயங்கைக்குறும்புள்ளாய்க்கோபக்…. ……*
குறும்புள்ளாய்ப்பாய்த்துகுதிகொள்ளப்-பறங்கிகளும். (௩௯)
சோனகருங்கந்சதுரிதவராகனிது……………… ……*
சீனர்வரவிட்டசிவிகையிது-யானைகட்டி…… … …(௪௰)
பிண்டிகொண்டமைசூர்மேல்வேட்டைபோய்த்தம்முடைய *
தண்டுகொண்டுவந்ததனங்களிது-மண்டலிகர்… … (௪௰௧)
இட்டதிறைகளிதுபராக்கென்றுசொல்லிக்……… …. *
கட்டியர்கொண்டாடக்கனபேரி-கொட்டரண … .. (௪௰௨)
மல்லாரிகொட்டவகோபிலமால்கோயிலா— … .. …… …*
ரெல்லாருமோர்பாவினிருப்ப-நல்லமிர்த …… …(௪௰௩)
போசனுக்கூவாபூபாலன்சமுத்திரத்து ……… … …. *
மாசனமுமன்றுடிமங்கலத்து-மாசனமும்… … …(௪௰௪)
அத்தலக்குன்றிமகாசனமுமாற்றாராம்……… … ……*
அத்தலத்தில்வைதிகநூலந்தணரும்-வித்வஜனர் .. (௪௰௫)
பக்ஷமுமூமெங்கோன்பவிசுப்பலன்களுமென்…. …. *
ரக்ஷயமாமென்கக்ஷைவழங்க-ரக்ஷகரும் ……… (௪௰௬)
கோரசிங்கரூபவுக்ரகோதண்டபாணியைப்போல் .. … …*
வீரசிங்காதனத்தில்வீற்றிருந்தான்-சூரியன்முன் … (௪௰௭)
பங்கயம்போலானேன்பரமனெனச்சென்றெதிரே… . …*
செங்கைதனையேந்திச்செயமென்றேன்-இங்கே .. (௪௰௮)
இருமென்றெனையனிடங்காட்டப்பெற்றேன்….. .. …*
அருகிலிருந்தேன்மகிழ்ச்சியானேன்-கருணைபுரிந் . (௪௰௯)

தென்மேல்விழிவைத்தானெங்கோன்குறிப்பறிந்து ...... *
பொன்மேவும்பெஞ்சைப்புரந்தரா-மன்னு......... (௱௭௰)
நிகளங்காமல்லாநிலைக்கோட்டைராயா ........ *
அகளங்காவாளுக்கபிமா-நகைமுகப்பிர ........ (௱௭௧)
தாபாகலிகோபாசதுராவிருதுபண்டு ........ *
பாபாவலக்கவம்சபாக்யகுல-தீபா ........ (௱௭௨)
சுமுகப்ரமுகலளிதசுகுணகுணரவியனைய ........ *
சுமுகநகைமுககமலதளநபனு-அமிர்தரச ........ (௱௭௩)
மதுரவித்வசனமிர்கமதமெழுதுபுயசைல ........ *
சதுரதடகடகரடசமரகரி-உதயகெரு ........ (௱௭௪)
விதநடனபரிநகுலவிகடமிடிம்குடடுடி ........ *
அதிரவடிவருடுசரணடலபய-அதுலகுல ........ (௱௭௫)
சந்திரசிந்துரசந்தனகுங்கும ........ *
மந்தரகொங்கைமடைந்தையா-சுந்தர ........ (௱௭௬)
கல்விப்பெருங்கடலேகற்பகக்கன்றேகமலச் ........ *
செல்விக்குவாய்த்ததிரவியமே-வெல்லுமதக் ........ (௱௭௭)
கூன்கோட்டியானைக்குறுகாதொனுங்காட்டு ........ *
மான்கூட்டஞ்சாடும்வரிப்புலியே-மீன்கூட்டம் ........ (௱௭௮)
பாகிக்குறநிவந்தபன்றிமலைச்சாரலிலே ........ *
ஆதிக்கஞ்செய்திருக்குமாளியே-ஓதுபகை ........ (௱௭௯)
வீரமண்டலீகரொனும்வேழங்களைவிழுங்கும் ........ *
பாரகண்டபேரண்டபக்ஷியே-சேரலாய் ........ (௱௮௰)
அண்டிப்பொருவோரரிக்குலத்தைவாளுகிராத் ........ *
தண்டிற்கிழிக்குஞ்சரபமே-திண்டிறல்வேற் ........ (௱௮௧)
போசேந்த்ராசக்கரபுவனேந்த்ராராஜாதி ........ *
ராஜேந்த்ராதீனசனரக்ஷகா-வீகுதிரை ........ (௱௮௨)
ஆற்றிலேநாலுமனுதினமும்பொன்னூறும் ........ *
ஊற்றிலேபாறுமுடையானே-ஏற்றமுள்ள ........ (௱௮௩)
பத்தூரொவ்வொன்றுப்படைக்குந்தலையூராம் ........ *
நத்தாருமொன்பதூர்நாயகனே-மொய்த்தகடல் ........ (௱௮௪)
ஒப்பத்திரண்டதளமுள்ளசதுருடியங்கன் ........ *
முப்பத்திரண்டுபெற்றமொய்ம்பனே-இப்புவியில் (௱௮௫)

அண்டலரைவெல்லுமறுபத்துநாலுமன்னர் ... ........... *
கண்டசெயதுங்கரணகங்கணனே-மிண்டுகொண்டு (௩௮௬)
சண்டைக்குடில்லித்தளம்வந்துதாருலும் ... ............... *
கண்டுமலையேறுதகண்டனே-தண்டஜய ... ... ..... (௩௮௭)
தண்டனேகாரியவுத்தண்டனைசூதாலே ... ... ...... ... *
தண்டனேவீர்யகோதண்டனே-தண்டளவத் ... .. (௩௮௮)
தாரனேசர்க்குணவிஸ்தாரனேகற்றவர்க்கு ...... .... .. ... *
தாரனேயற்றவர்க்காதாரனே-ஆரமுத ................. (௩௮௯)
சோமனேயன்னசத்ரசோமனேகற்பகப்பூங் ............... *
காமனேவிற்கரும்புக்காமனே-நாமகள்சேர் ... ... (௩௯௰)
பெஞ்சைநகர்ச்சிந்தமனபேறேசரற்கால... ... ...... ..... *
மஞ்சைநிகருந்த்யாகவள்ளலே-அஞ்சித் ............... (௩௯௧)
தொழுதுங்கவேந்தருக்குத்துள்ளுசீட்டொப்பம் ......... *
எழுதும்பெரியநாகேந்த்ரா-எளியோர் ................ (௩௯௨)
கரங்கள்விரித்தேற்கக்கன்றுகண்டவாபோல் ..... .... ... *
இரங்கும்பெரியநாகேந்த்ரா வரங்கள் ................ (௩௯௩)
செருக்குமசரூபம்போற்சிங்காதனத்தில் ................... *
இருக்கும்பெரியநாகேந்த்ரா-பருக்கும் ... ... ...... (௩௯௪)
மழைக்கும்பகம்பமதயானைவீரிட் ... ...................... *
டழைக்கும்பெரியநாகையா-தழைத்தபுகழ்க் ... ... (௩௯௫)
கூளமகிபன்குமாரதுரைச்சிந்தமனும் ... ...... ..... ... *
வாளபயசோதரவசிரனே-நீள்சகள ...... ..... ... (௩௯௬)

[தன்வித்தைஅரங்கேற்றினமைகூறல்.]

சம்பனுவென்றுதமிழ்பாடினேன்தமிழிற் ................... *
கம்பனுமென்றார்கவிராஜர்-சொம்புபெறக் ... .. ... (௩௯௭)
காட்டாகநூறுகவிசொன்னேனங்கேயென் ..... ........ *
அஷ்டாவதானமரங்கேற்றினேன்-அஷ்டாங்க ... ... (௩௯௮)
போககாவித்துகிலோருள்ளமகிழ்ந்தமிர்த ... ...... ....... *
பாகமெனச்சொல்லப்பண்ணினேன்-த்யாகநிதி ... (௩௯௯)
என்னும்பெரியநாகேந்த்ரனகளங்க ...... ... .............. *
மன்னன்திருவாய்மலர்ந்தருளி-என்னைக் ...... ......... (௪௱)

கவிச்சக்ரவர்த்தியென்றான்காவலாநீயே...... ............*
புவிச்சக்ரவர்த்தியெனப்போற்றச்-செவிக்குதல்ல ...(தா௧)

[வெகுமதிசெய்தவைகூறல்.]

முத்துக்கடுக்கனொடுமுன்கைதனக்கிணங்கும் ... ... .......*
றெல்தகடகம்ரத்நஹாரமணிக்-கொத்துச்... ......(தா௨)
சரப்பணிதும்பிப்பதக்கஞ்சாலுவைபொற்சாந்தி... .....*
பரப்பியிநிபொற்சரிகைப்பாகை-தரித்தருள்பி... ...(தா௩)
தாம்பரங்களீந்தான்தருப்போலவனெனக்கங்... ...... .....*
காம்பரிசிலீபமதற்குமுனே-மேம்படும்போ ...... .(தா௪)
தீட்டிபுகழ்க்கல்லூர்வாழ்திப்பணவேளென்தலைக்குச்... ...*
சூட்டவொருமுத்துத்தராயீந்தான்-தாய்நீடிகோத...(தா௫)
தன்னுடனுங்குமேளந்த்ரன்தம்பியாஞ்சிந்தமனோர்... ..... *
கண்டசரமீந்தான்கழுத்துக்குக்-கொண்டலெனும்...(தா௬)
முத்துராயன்கொடுத்தான்மூன்னணிசுடாக்கியனன் ... .. *
பத்துவரர்கன்பெறவோர்பாகிந்தாய்-சித்தசனும் ...(தா௭)
ரங்கப்பன்கைக்கொலுசுநல்கினன்மோதிரமென்... ... .*
செங்கைவிரலுக்கணிந்தான்சிந்தமவ்வள்-தங்கவளை...(தா௮)
ராசகோபாலையநல்கினன்சீர்கொள்முத்துப் ............*
போசனொருமுத்துவடம்பூட்டினன்-பேசுபுகழ்ச்... (தா௯)
சாந்தபூபன்கொடுத்தான்சாலுவைநன்னுகரத்நம்... ... *
ஈந்தான்கொடிநாகனென்கையில்-வாய்ந்தபுகழ் ...... (தா௰)
நல்லபனுணச்சுநடைப்பரியீந்தானுலகம் .. ... ... . ... *
சொல்லும்பணிக்காயன்சொக்கலிங்கம்-மல்லிகைப்பூத் ... *
தையலங்கியொன்றெனக்குத்தந்தான்பெரியதம்பி... .... *
துய்பவெள்ளிக்குண்டுசெரக்காய்தந்தான்-பொய்யுமையாக் *
கூளக்கணக்கன்மணிகுண்டலந்தந்தானிரண்டு .. ... .......*
கோளித்திருணுக்களவாய்த்தூங்கவே-வேளைக் .. .. (தா௰௩)
குதவியதம்பான்கொடுத்தானொன்பதுபொன்பட்டுச் ... *
சதுரன்கைலாசதியாகு-புதுவயிரத்... ... ....... (தா௰௪)
தண்டோட்டிதந்தான்சவாதுப்பணிதந்தான்... .. ... ... *
கொண்டசொக்கலிங்கன்கொடுத்தானோர்-மூண்டாசு. தா௰௫

சட்டமிட்டுச்சொக்கலிங்கன்தந்தான்கணையாழி ... ... *
கட்டழகன்பாசிமந்துகட்டினான்-பட்டை ... (தூ௱௰௬)
யணைஞாண்தந்தான்பொன்னாச்சட்டைதந்தான் *
வரிசையர்ப்ராமமகிபன்-முருகுமுத்து ... (தூ௱௰௭)
சின்னனுதவினான்திரன்வடகூளன் ... ... ... ❀
பொன்னால்விருதுதண்டைபூட்டினான்-மின்னெறிக்குந்.
தாயித்திராமனன்றுதந்தான்திருமலையன் ... ... .. *
நேயத்தாற்பொற்பூநிசாறுதந்தான்-தூயதுணைக்...(தூ௱௰௯)
காமனீந்தானற்கறவையைந்துகண்டையிட்ட ... ... *
சோமனீந்தானானைக்குச்சோடாகச்-சோமனெனும்(தூ௱௨௰)
சோலைசிவப்புத்துப்பட்டிதந்தான்மாடன் ... ... *
பாலுக்குக்காராம்பசுதந்தான்-மால்குழந்தை (தூ௱௨௰௧)
வேலனெனக்கிரண்டுவெள்ளையெருதாட்மேகம் ... *
போலக்கொடுத்தோட்டிப்போவென்றான்-சீலிபூ (தூ௱௨௰௨)
பாலன்கொடுத்தானேர்பச்சைவடஞ்சோடங்கி ❀
நாலுமுடிப்புமொக்கநல்கினான்-சீலனெனும் (தூ௱௨௰௩)
நல்லமருதன்கொடுத்தானல்லகுதிரைமறி ... ... .. *
கல்விதெரிசிக்கணனென்கண்ணுளிரக்-கொல்லத்துப்(தூ௱௨௰௪
பச்சைக்கபாய்தந்தான்பாரியொத்தகாமியங்கே ... *
மெச்சியெனக்கிரண்டுமேழிதந்தான்-உச்சிதமாக் (தூ௱௨௰௫)
கூதலுக்குப்போர்வைதந்தான்கொண்டபூபன்னுலக *
நாதன்சகலாத்துநல்கினான்-மாதங்கக் ... ... (தூ௱௨௰௬)
கட்டிக்கொடுத்தனனேகக்கண்டவன்குருவா ... ... *
ரொட்டிகொடுத்தானதற்குரொட்டிப்பு-சட்டிவிட்டு (தூ௱௨௰௭)
நாழிமுத்தைமுத்தையவேணல்கவரதப்பனொரு .. *
தாழிவிரலைபோட்டான்சமுகத்தில்-வாழியென (தூ௱௨௰௮)
ரங்கையனீந்தானங்கோரத்நகண்டிராமயனுந் ... ... *
துங்கன்கொடுத்தான்பொன்றொண்ணூறு-திங்கண்முக.
வீரப்பெருமாள்விரலுக்குவச்சிரக்கல் ... ... ...*
சேருற்றபொன்மோதிரந்தந்தான்-கோர (தூ௱௩௰)

அனுமத்துவசரருங்கருடடாலர் ... ... ... ... *
கனவிருதுசிங்கடார்ச்சாரர்-எனவாழும் ... ... (தூ ௫௧)
எல்லாருஞ்செம்பொனிறைந்தாலாயானலஞ்சூழ் *
நல்லாசனன்பெரியநாகேந்த்ரன்-செல்வத் (தூ ௫௨)
துரையெனக்கங்காட்டனன்சொர்ணபிஷேகம் ... ... *
வரையெனத்தந்தாமேலூர்மதமா-தரளக் ... (தூ ௫௩)
கவிகைதந்தான்வெள்ளைக்கரிதந்தான்செம்பொற் *
சிவிகைதந்தான்காந்திசிறந்த-ரவிபோல் ... (தூ ௫௪)
இருட்டகற்றுதீவட்டியீந்தான்மதிபோற் ... ... ... *
சுருட்டிதந்தான்தந்தான்றுவசம்-பெருத்தசில (தூ ௫௫)
ஊர்தந்தானும்பளிக்கையூர்தோறும்பண்ணைவைக்க *
ஏர்தந்தான்வாழ்வுக்கிடந்தந்தான்-ஆர்தந்தார் (தூ ௫௬)
இந்தத்தியாகமிவனைப்போல்வாவியர ... ... ... *
விந்தத்தியாகவந்தமெல்லியலே-இந்தவிதம் (தூ ௫௭)

[விறலியைத் தூதுவிடுத்தமைகூறியது.]

என்செய்தியாதிதொடர்ந்தெல்லாமுனக்குரைத்தேன் ... *
பொன்செய்தவெம்மூர்க்குப்போயினினீ-மின்செய்த.
சிற்றிடையாளாகியவென்தேவியாளைக்கண்டு ... ... *
நற்றிறஞ்சேர்வீணைநயம்பாடி-மற்றவளுக் ... (தூ ௫௮)
வன்குறையைமெள்ளவியம்பியெதிர்சொல்லுமந்தப் ... *
பொன்குறையுங்கேட்டுடல்போக்கியே-நன்குறுமென்.
ஆசைமனையாட்டிதனக்கையங்காரின்னுமொரு ... .. *
மேலாசனைக்கேகுவரோவிட்டெனவா-மேலாசனையுட். தூ ௬௧
கொள்ளாமலென்சபதங்கூறிமுன்னைக்குற்றநினைந் ... *
தெள்ளாமற்கற்பினியல்போதி-உள்ளாளப்... ...(தூ ௬௨)
பண்பாடிப்புட்காமபாணம்படச்செய்து ... ... *
நண்பாடியெவ்வரவைநல்கேற்றுக்-கண்பார்க்க... தூ ௬௩)
ஒகையாய்முன்போலுறவாக்கச்செல்வாழி ... *
கோகைவிறலிநீதூது... ... ... ... ... (தூ ௬௪)

ஆக-கண்ணி-தூ ௬௪.

விறலிவிடுதூது முற்றுப்பெற்றது.

MAR
LIBRARY